THE HON. SRI B. PARAMESWARAN : (*a*) No, Sir. The petition was received only by the Collector of South Arcot.

(*b*) The Collector of South Arcot has reported that he is taking action to acquire patta lands for these purposes.

[21st September 1956

Minimum bus fares in mufassal

* 158 Q.—SRI M. NARAYANA KURUP : Will the Hon. the Minister for Religious Endowments and Transport be pleased to state whether the Government have taken any decision on the question of reduction of minimum bus fare of 5 annas in mufassal?

THE HON. SRI B. PARAMESWARAN : The Government have recently examined the question of reduction of the maximum bus fare of 5 annas in the mufassal and have decided that the existing orders fixing a fare not exceeding 5 annas for distances of less than 8 miles in the plains in the mufassal should be continued.

SRI M. NARAYANA KURUP : Is it not a fact, Sir, that the Hon. Minister promised to reduce the fare on more than one occasion and assured the House and confirmed it later. Now what is the reason to go back on the assurance given by the Hon. Minister.

THE HON. SRI B. PARAMESWARAN : I did not promise to reduce it. I only promised that the matter would be examined. After deep examination we came to the conclusion that the present rate should continue.

SRI P. G. MANICKAM : காலணா, அரையணா, முக்காலணா முதலிய சில்லறைகளைச் சேர்க்காமல், தூரத்திற்குத் தகுந்தபடி அணாக்களாகவும், ரூபாய்களாகவும் பஸ் கட்டணங்களை வசூலிப்பதற்கான சட்டத்தை அரசாங்கம் இயற்றுமா என்பதை அறியவிரும்புகிறேன்.

THE HON. SRI B. PARAMESWARAN : இப்போதிருக்கும் நிலைமையில் அது முடியாது.

DR. K. B. MENON : Is the reason for the decision of the Government due to the fact that reduction of the fare is uneconomical?

THE HON. SRI B. PARAMESWARAN : Originally when the minimum was fixed at the rate of four annas, the idea was to prevent on the one hand short distance passengers displacing long distance passengers and on the other hand, to save long distance passengers from congestion consequent on passengers bound for short distance getting into the buses. Both these considerations are still valid. In view of the fall in the value of the money, at present five annas is equal to four annas in 1955 when the rate was fixed. It would, therefore, be hazardous, on the complaint of only one district, to reduce the minimum fare to four annas and the existing minimum which some owners are themselves reducing, deserves to be continued in the public interest.

SRI T. C. NARAYANAN NAMBIAR : Will the Government be kind enough to consider the question of giving half-fare concessions at least to the student population in rural parts who will have to go for two or three miles for their high schools. Generally the high schools are far away from the rural parts. Therefore, will the Government take suitable steps in the matter?

21st September 1956]

THE HON. SRI B. PARAMESWARAN : I think, some bus operators are really charging less than five annas for short distance routes.

SRI M. NARAYANA KURUP : When this question was raised during the debate on the Budget for 1955–56, the Hon. Minister, in winding up the debate, said that Members would have glad news before they reached home. Did not the Hon. Minister intend that there would be a reduction in the minimum fare of five annas as it now exists?

THE HON. SRI B. PARAMESWARAN : Sir, the Government tried all possible methods to see that the rates were reduced. But this complaint is only from the district of Malabar whereas in other districts bus operators seem to feel that there is no need for reduction at all. Therefore, when I said that hon. Members would receive encouraging news, I did not mean that the rates would be reduced. I meant that the Government would pay sympathetic consideration to the suggestion made by the hon. Member.

SRI K. KUNHI MOHAMED SHAFEE : As far as the Malabar district is concerned, the minimum bus charge is five annas, in certain places but in certain other places, it is three annas. For instance, in my place, there are one or two buses running on Perintalmanna-Anakayam route and they collect only three annas for a distance of five or six miles. Therefore, the question of protecting either the bus owner or the long distance passengers does not arise. Considering this reality, will the Government reduce the minimum bus charge throughout the district from five annas to three annas?

THE HON. SRI B. PARAMESWARAN : The hon. Member himself has just admitted that in certain places, they are charging only three annas for a distance of six miles. Therefore, the question of reducing the present rate does not arise at all?

SRI T. C. NARAYANAN NAMBIAR : The Hon. Minister has just now stated that certain bus operators are charging only three annas in Malabar. As far as my experience goes, in my constituency, four buses are in operation and for a distance of two miles from Pappinesseri to Kalyasseri, five annas are charged. From Kalyasseri to Parissinikadavu—a distance of three miles, five annas are charged. So also for a distance of one mile, from Chingala to Srikantapuram, five annas are charged even for the students. Therefore, will the Government see that proper steps are taken to collect only half-fare for short distances from the students?

THE HON. SRI B. PARAMESWARAN : I am sorry, I cannot promise it. It is already too late and the new Kerala State is going to be formed shortly where the hon. Member can raise this question and that Government may consider it.

[21st September 1956

Sri A. GOVINDASWAMY NAYAGAR : பஸ் கட்டணத்தைக் குறைத்தால் பஸ் முதலாளிகளின் வெறுப்பை அடையவேண்டியிருக்கும் என்று அரசாங்கம் பயந்து, அதன் காரணமாக பஸ் கட்டணத்தைக் குறைக்காமல் இருக்கிறது என்று அறிய வரும்புகிறேன்.

Mr. SPEAKER : I disallow that question.

Sri P. K. GOPALAKRISHNAN : Are the Government aware that a minimum charge of less than five annas is fixed in some of the neighbouring States. For instance, in the Travancore-Cochin State a minimum charge of three annas is fixed and there is no insecurity felt either by long distance passengers or bus operators. So, in view of the experience gained by one of the neighbouring States, will the Government reconsider their earlier decision, and reduce the minimum charge here also?

The Hon. Sri B. PARAMESWARAN : As I said, this complaint is not coming from any district except Malabar. Therefore, we cannot make exception in this case.

Sri M. NARAYANA KURUP : On a previous occasion the Hon. Minister stated that it was such a serious matter that the Hon. Minister dealing with it alone cannot decide it and the Cabinet had to decide it. May I know whether the decision not to reduce the minimum fare of five annas is a Cabinet decision?

The Hon. Sri B. PARAMESWARAN : No, Sir, it was not a Cabinet decision. The Minister for Finance and the Minister for Transport have to decide it.

Sri A. IYANAR : தற்போது மூன்று மைல், நான்கு மைல்களுக்குக்கூட ஐந்தணா வசூலிப்பதானது பெரும்பாலான ஜனங்களுக்கு மிகவும் சிரமமாக இருப்பதால், குறைந்தது நான்கு மைல்களுக்கு உட்பட்ட தூரத்திற்காவது ஐந்தணாக் கட்டணத்தைக் குறைப்பதற்கு அரசாங்கம் முன் வருமா?

The Hon. Sri B. PARAMESWARAN : இதையெல்லாம் பரிசீலித்துத்தான் அரசாங்கம் ஒரு முடிவுக்கு வந்திருக்கிறது. இவ்வளவு சீக்கிரம் முடிவை மாற்ற முடியாது. இன்னும் நாளடைவில் இதைத் திருத்தமுடியுமா என்று யோசிப்போம்.

Sri C. KANDASAMY : ஐந்து அணாவானது மிக அதிகப்படியான கட்டணம் என்று ஏகோபித்த அபிப்பிராயம் இருக்கிறது. அரசாங்கம் சொல்லும் கஷ்டங்களையும் சணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. ஆகவே குறிப்பிட்ட பாதைகளில் செல்லும் பஸ்களில் சிலவற்றை வழியில் நிற்காமல் நேரே செல்லும் (தரு பஸ்) பஸ்களாகவும், மீதி பஸ்களை வழியில் ஆங்காங்கே நின்று செல்லும் பஸ்களாகவும் ஓட்டுவதற்கு ஏற்பாடு செய்து, அந்த நிலைமையிலாவது கட்டணத்தைக் குறைப்பதற்கு அரசாங்கம் முன் வருமா? அதாவது, ஒரு வழியில் 10 பஸ்கள் ஓடினால் 7 பஸ்களை நேரே செல்லும் பஸ்களாகவும், 3 பஸ்களை இடையிடையே நின்று செல்லும் பஸ்களாவும் ஓட்டுவதற்கு ஏற்பாடு செய்தாவது கட்டணத்தைக் குறைப்பதற்கு அரசாங்கம் முன்வருமா?

The Hon. Sri B. PARAMESWARAN : கனம் அங்கத்தினர் சொன்ன யோசனை பரிசீலனை செய்யப்படும்.

21st September 1956]

Loan for Tellicherry Municipality

*159 *Q.*—SRI P. K. GOPALAKRISHNAN (on behalf of Sri V. R. Krishna Ayyar) : Will the Hon. the Minister for Local Administration be pleased to state whether the Government have received any representation in May 1956 from the Tellicherry Municipality asking for a loan to pay its 25 per cent contribution for the schemes of preventing sea erosion in that town? 11-50 a.m.

THE HON. SRI S. S. RAMASWAMI PADAYACHI : No, Sir.

SRI P. K. GOPALAKRISHNAN : May I know whether the Hon. Minister is aware that sea erosion is a big problem throughout Malabar and especially in Tellicherry? During certain seasons even the building of the District Court is threatened by sea erosion. In view of that, will the Government take the responsibility of bunding the sea? The Government, on previous occasions, have answered on the floor of the House that it is the responsibility of the municipality to prevent sea erosion. In view of that fact, will the Government sanction the loans asked for by the Municipality of Tellicherry and see that sea erosion is prevented?

THE HON. SRI S. S. RAMASWAMI PADAYACHI : Whenever applications for loans come, certainly the Government will consider them. With regard to this matter, the Chief Engineer, Highways, has been having some correspondence with the municipality.

UNSTARRED QUESTIONS.

Construction of a drinking-water well for Venkaivadi Harijan Colony

10 *Q.*—SRI M. KATTIMUTHU : Will the Hon. the Minister for Religious Endowments and Transport be pleased to state the reasons for not finishing the construction of the drinking-water well in Venkaivadi Harijan Colony in Kallakurichi taluk yet?

A.—An estimate for Rs. 1,710 for repairing the well in R.S. No. 107-3, battai poramboke of Venkaivadi village, Kallakurichi taluk, was sanctioned by the Collector of South Arcot in June 1955. At the time of carrying out the repairs, two of the villagers objected on the ground that the well in question had been constructed by their forefathers and that the Government had no right over the well. As there are no records to prove conclusively the ownership, it is considered not desirable to spend Government money on repairs to this well. The Collector is on the look-out for a suitable place at the disposal of the Government very near the Harijan Colony and will take action to sink a new well as soon as a suitable site is fixed.

Arecanut Marketing Co-operative Society, Kumaranellur

11 *Q.*—SRI E. T. KUNHAN : Will the Hon. the Minister for Health be pleased to state whether the Government will place

[21st September 1956

on the table of the House a statement showing financial progress made by the Kumaranellur Arecanut Marketing Co-operative Society year by year after it began to receive the State aid?

A.—A statement[a] showing the financial progress made by the Ponnani Taluk Arecanut Processing and Marketing Society from 1950–51 is appended.

Harijan trustees

12 *Q*.—SRI M. KATTIMUTHU : Will the Hon. the Minister for Religious Endowments and Transport be pleased to state—

(*a*) whether any Harijans have been appointed as trustees in the Vriddhachalam Palamalanathar temple; and

(*b*) if not, the reasons therefor?

A.—(*a*) No

(*b*) There was no application from any qualified Harijan candidate suitable for appointment as trustee.

Admission to Government Medical Colleges

13 *Q*.—SRI K. R. VISWANATHAN : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) the number of applications received from the candidates belonging to the Tiruchirappalli district for admission to the Government Medical Colleges in the State;

(*b*) the number of candidates actually selected and the number of seats allotted to the Tiruchirappalli district on districtwar basis; and

(*c*) the number among the candidates selected hailing from municipal towns, semi-urban areas and rural parts?

A.—(*a*) Sixty-seven.

(*b*) Twenty seats have been allotted to the Tiruchirappalli district on districtwar basis and twenty candidates have been selected against these seats.

(*c*) The information is not easily available. The Government consider that the time and labour involved in collecting the particulars will not be commensurate with the statistics asked for.

Admission of Backward Classes into the Medical Colleges

14 *Q*.—SRI S. DAIVASIGAMONEY : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) the number of male and female candidates belonging to Backward Classes that applied for admission into the Medical Colleges in the State this year and the number of candidates that were actually selected, districtwar; and

[a] Printed as Appendix I on page 68 infra.

21st September 1956]

(*b*) the number of male and female candidates that applied and were selected from the Backward Class of Vanniyakula **Kshatriyas** in each district?

A.—(*a*) & (*b*) Four hundred and seventy-four candidates belonging to Backward Classes applied this year for admission to the M.B.B.S. course. Out of them, 143 candidates have been selected including those in the reserve list and those selected by merit. The number of seats reserved districtwar for Backward Classes is given below :—

Madras	3	**North Arcot**	6
Chingleput	4	**Tiruchirappalli**	6
South Arcot	6	**Salem**	7
Tanjore	6	**Coimbatore**	7
Madurai	6	**The Nilgiris**	2
Ramanathapuram	4	**Malabar**	10
Tirunelveli	5	**South Kanara**	4
		Total ...	76

All the reserved seats have been filled by candidates belonging to Backward Classes.

Information regarding the number of men and women candidates belonging to the Backward Classes including the Vanniyakula Kshatriya community, who applied and were selected from each district, is not easily available. The Government consider that the time and labour involved in collecting the information will not be commensurate with its usefulness.

Industries to be started in Malabar under Second Five-Year Plan

15 *Q*.—SRI K. P. GOPALAN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state the major, minor and cottage industries which the Government have proposed to start in Malabar under the Second Five-Year Plan?

A.—A list of schemes sanctioned under the First Five-Year Plan and continued during the Second Five-Year Plan period and a list [a] of the schemes proposed to be sanctioned for Malabar district under the Second Five-Year Plan are placed on the table of the House.

Dysentery and smallpox

16 *Q*.—SRI K. P. GOPALAN : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) the number of persons who were affected by dysentery and smallpox in Peringom and Vayakkara amsams in Payyanur firka, North Malabar, in the months of May, June and July 1956;

(*b*) the number of persons that died; and

(*c*) the preventive measures taken by the Government?

[a] Printed on Appendix II on pages 68–70 infra.

[21st September 1956

A.—(*a*) The number of persons who were affected by dysentery and smallpox in Peringom and Vayakkara amsams is as follows :—

	Dysentery.			*Smallpox.*		
	May.	*June.*	*July.*	*May.*	*June.*	*July.*
Peringom	26	3	..	..	9	..
Vayakkara	..	..	..	7	10	..

(*b*) The number of persons that died is as follows :—

	Dysentery.			*Smallpox.*		
	May.	*June.*	*July.*	*May.*	*June.*	*July.*
Peringom	2	..	..	..	4	..
Vayakkara	..	..	..	..	9	..

(*c*) In addition to the Range Health Inspector and two Health Assistants, an additional staff of one Special Health Inspector, two Reserve Health Assistants and two Special Temporary Health Assistants were posted for work in the two villages. One hundred and twenty-four wells were chlorinated and 108 houses were disinfected. One thousand two hundred and sixty-six sulphaguanidine tablets, 1,100 multi-vitamin tablets and 48 lb. of skim milk powder were distributed. Four hundred and fifty-two primary vaccinations and 4,302 revaccinations were performed in the villages. Propaganda talks on smallpox, dysentery and diarrhœa were also given.

Area Committee, Tiruchirappalli district

17 *Q.*—SRI K. R. VISWANATHAN : Will the Hon. the Minister for Religious Endowments and Transport be pleased to state—

(*a*) the number and the names of the members appointed to the Area Committee of Tiruchirappalli district during the year 1956–57;

(*b*) the dates when the vacancies arose and the dates of filling up of the vacancies; and

(*c*) the reasons, if any, for the delay in filling up of the vacancies?

A.—(*a*) (1) Sri V. Arunachala Thevar, President, Congress Committee, Pudukkottai.

(2) Dr. V. Subramaniam, Srirangam.

(*b*) One vacancy arose in September 1955 and the other in January 1956; both the vacancies were filled in July 1956.

(*c*) Usually appointments to Area Committees are made after obtaining the recommendations of the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Administration) Department and the Collector. This naturally involves some delay in certain cases.

[*Note*.—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

II.—ANNOUNCEMENTS BY THE HON. SPEAKER.

(1) MESSAGES FROM THE GOVERNOR.

MR. SPEAKER : I have to announce to the House the following messages, dated 5th August 1956 and 23rd August 1956, received from the Governor of Madras :—

"(i) In pursuance of Article 207, clause (3), of the Constitution of India, I, Sri Prakasa, Governor of Madras, hereby recommend to the Madras Legislative Assembly the consideration of the Madras Estates Land (Reduction of Rent) Amendment Bill, 1956.

(ii) In pursuance of Article 207, clause (1), read with Article 199, clause (1), sub-clause (*a*), of the Constitution of India, I, Sri Prakasa, Governor of Madras, hereby give my recommendation for the introduction in the Madras Legislative Assembly of the Madras Land Revenue (Surcharge and Additional Surcharge) Amendment Bill, 1956."

(2) SITTINGS OF THE HOUSE.

MR. SPEAKER : The programme of the House, as decided by the Business Advisory Committee, may be stated by the Hon. the Leader of the House.

THE HON. SRI C. SUBRAMANIAM : Mr. Speaker, in the Business Advisory Committee meeting, it has been decided that the following Bills :—

(1) The Madras Cultivating Tenants Protection (Amendment) Bill, 1956,

(2) The Madras Cultivating Tenants (Payment of Fair Rent) Bill, 1956, and

(3) The Tanjore Tenants and Pannaiyal Protection (Amendment) Bill, 1956

and the Resolution with regard to the ratification of the amendments proposed to be made to the Constitution of India should be finished by Tuesday. That means, four days—to-day, tomorrow, Monday and Tuesday—would be available for these. The hours of sitting also have been fixed. Tentatively the general discussion on the Madras Cultivating Tenants Protection (Amendment) Bill, 1956, will take place to-day, and to-morrow, the clause by clause consideration of the Bill will be taken up. On Monday, the Madras Cultivating Tenants (Payment of Fair Rent) Bill, 1956, the Tanjore Tenants and Pannaiyal Protection (Amendment) Bill, 1956, and the Government Resolution will be taken up. The hours of sitting have been fixed and from to-morrow onwards the House will sit from 9 a.m. to 1 p.m., i.e., four hours everyday. As regards the work on Wednesday, we have not fixed any business and that will be done at the meeting of the Business

Advisory Committee on Monday seeing the progress we are able to make on these Bills. Twenty-seventh September 1956 will be a non-official day. Twenty-eighth and 29th will have to be allotted for considering the Supplementary Budget and the Appropriation Bill arising out of that. These are the decisions which the Business Advisory Committee have taken and I hope the House will approve of that.

The recommendations of the Business Advisory Committee were approved.

(3) REGARDING AMENDMENTS.

MR. SPEAKER : I have to announce to the House that I have fixed 5 p.m. to-day, i.e., 21st September 1956, as the time within which amendments to the Madras Cultivating Tenants Protection (Amendment) Bill, 1956, should reach the Legislative Assembly office, and amendments for the Madras Cultivating Tenants (Payment of Fair Rent) Bill, 1956, should reach the office by 5 p.m. on 22nd September 1956. The amendments for the Tanjore Tenants and Pannaiyal Protection (Amendment) Bill, 1956, should reach the office by 10 a.m. on Monday, the 24th September 1956."

III.—ADJOURNMENT MOTION *RE*

ACTION OF THE HEALTH OFFICER IN SEALING SOME OF THE TURMERIC GODOWNS IN ERODE UNDER THE PREVENTION OF FOOD ADULTERATION ACT.

MR. SPEAKER : I have received notice of an adjournment motion from Sri K. T. Raju which reads as follows :—

"This House do adjourn to discuss a definite matter of urgent public importance, viz., the serious situation and anxiety caused to the peasants due to the action of the Health Officer who sealed some of the turmeric godowns on 20th September 1956 and is threatening to close most of the godowns in Erode town under the Prevention of Food Adulteration Act indiscriminately thereby causing heavy loss to the peasants and almost closing down the turmeric market and business in Erode which is the centre for the Madras State."

May I know what the hon. Member has got to say in the matter?

11-55 a.m. * SRI K. T. RAJU : கனம் சபாநாயகர் அவர்களே, ஈரோடு மஞ்சள் கிடங்குகளுக்குச் சென்று சோதனை போட்டதில், அங்கே இருந்த மஞ்சளில் சில கெட்டுப் போய் சுகாதாரத்திற்குப் பாதகம் விளைவிக்கும்படி இருந்தது என்ற காரணத்திற்காக கிடங்குகளையே சீல் வைத்து விட்டு வந்திருக்கிறார்கள் சுகாதார அதிகாரிகள். கெட்டுப்போன மஞ்சள் சிலவற்றை எடுத்து வேண்டுமென்றால் அவர்கள் பரிட்சைக்காக கிண்டிக்கு அனுப்பியிருக்கலாம். அதை விட்டு விட்டு கிடங்குகளையே சீல் போட்டு வந்து விட்டதால் ஈரோடு மஞ்சள் மார்க்கெட் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது. சென்னை ராஜ்யத்திலேயே கோயம்புத்தூர், ஈரோடு போன்ற இந்த இடங்கள் தான் மஞ்சள் உற்பத்தியில் அதிகம் ஈடுபட்டுள்ள இடம். சுகாதாரத்திற்குக் கெடுதி விளைவிக்கும் மஞ்சள் மார்க்கெட்டுக்கு வரக்கூடாது என்பதற்காக அரசாங்கம் நடவடிக்கை எடுப்பதைப் பற்றி எனக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் விலைவாசியும் இறங்கிக் கொண்டிருக்கும்போது மஞ்சள்

21st September 1956] [Sri K. T. Raju]

சட்டை ரூ. 250-லிருந்து ரூ. 80, 90-க்கு இறங்கிக் கொண்டிருக்கும்போது வியாபார மார்க்கெட்டும் பாதிக்கும்படியாக கிடங்குகளை மூடுவது சரியல்ல. அதனால் நேற்று கப்பலில் ஏற்றவேண்டிய மஞ்சள் பூராவும் வந்து சேரமல் போய் விட்டது. இம்மாதிரியான நடவடிக்கையின் காரணமாக ஆயிரக் கணக்கான விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள் என்பதோடு, இடையில் உள்ள மண்டித் தரகர்களுக்கும் இதனால் பல கஷ்டங்கள் ஏறபடும். எந்தச் சரக்கு கெட்டுப் போய் விட்டதோ அதை விலக்கி விட்டு மற்றதை மார்க்கெட்டில் விற்பதற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்யாவிட்டால் இதர மஞ்சளும் நாசம் அடையும். விவசாயிகளும் பாதிக்கப்படுவார்கள். கெட்டுப் போன சரக்கை மாத்திரம் கிண்டிக்கு அனுப்பி விட்டு, எல்லாக் கிடங்குகளையும் சீல் போடவேண்டாம் என உத்தரவு போட வேண்டும். இது மிகவும் முக்கியமான விஷயம். சர்க்கார் இது விஷயத்தில் உடனடியாக நடவடிக்கை எடுக்காவிட்டால் கோயம்புத்தூர் ஜில்லா முழுவதும் பாதிக்கப்பட வேண்டிய நிலைமை ஏற்பட்டு விடும். ஆகவே இதைப்பற்றி உடனடியாக விவாதிக்க இந்தச் சபை ஒத்திவைக்கப்பட வேண்டுமென்ற தீர்மானத்தை வற்புறுத்துகிறேன்.

MR. SPEAKER : Will the Hon. Minister be able to say anything on this matter?

THE HON. SRI A. B. SHETTY : I am not in a position to say anything just now on this matter for want of information. I shall have enquiries made in this matter. 12 noon.

MR. SPEAKER : I think *prima facie* this is a matter in which the officer concerned has done his duties in the ordinary course of administration. Therefore I do not think that this is a matter on which an adjournment motion could be moved. Therefore I rule it out of order.

We shall now take up the next item, viz., the Madras Cultivating Tenants Protection (Amendment) Bill, 1956.

IV.—GOVERNMENT BILL.

THE MADRAS CULTIVATING TENANTS PROTECTION (AMENDMENT) BILL, 1956 (L.A. BILL NO. 10 OF 1956).

MR. SPEAKER : The Hon. the Minister for Land Revenue may now move the Madras Cultivating Tenants Protection (Amendment) Bill, 1956.

SRI M. NARAYANA KURUP : On a point of order, Sir. Our rule 106 says . . .

MR. SPEAKER : There can be no point of order at this stage. I have already called upon the Hon. the Minister for Land Revenue to move the Madras Cultivating Tenants Protection (Amendment) Bill, 1956.

SRI M. NARAYANA KURUP : I have not stated my point of order, Sir.

MR. SPEAKER : I have ruled that there can be no point of order at this stage. The Hon. the Minister for Land Revenue may now move the Madras Cultivating Tenants Protection (Amendment) Bill, 1956. There is no other subject before the House.

[21st September 1956

* THE HON. SRI M. A. MANICKAVELU : Mr. Speaker, Sir, I beg to present the Report* of the Select Committee on the Madras Cultivating Tenants Protection (Amendment) Bill, 1956 (L.A Bill No. 10 of 1956) and move—

"That the Bill, as amended by the Select Committee, be taken into consideration."

The Bill makes provision for the extension of the life of the Madras Cultivating Tenants Protection Act, 1955, for two years and extends that Act to the areas where the South Kanara Cultivating Tenants Protection Act, 1954, and the Tanjore Tenants and Pannaiyal Protection Act, 1952, are now in force. The Bill also contains certain amendments to the existing Act which were found necessary. The main amendment made by the Select Committee is in respect of resumption of land for personal cultivation. It was considered just to give some relief to small landowners who are entirely dependent on the income from the lands owned by them. Provision has therefore been made so that a small landlord may resume possession for personal cultivation one-half of the extent of the lands to which he is entitled to possession but not exceeding 5 acres of wet land or its equivalent. For this he has to apply to the Revenue Divisional Officer who will enquire into the matter and pass suitable orders. A person who owns land exceeding 13-1/3 acres of wet land or its equivalent on the day on which the Amending Act comes into force or who has been assessed to any sales tax, profession tax or income-tax during 1954–55 or 1955–56 cannot resume land under the above provision. So also if the extent of land which a landlord is entitled to resume exceeds 5 acres of wet land along with the land of which he is already in possession, either as owner or as tenant, he will not be eligible for the concession. Thus it will be possible only for very small landlords without any other substantial avocation to resume lands under the above provision. The Government consider that as the stay against eviction has been in force for one year now and is to remain for two years more, it is only fair that these small landlords should be given this concession. If any landlord who has resumed possession of any land for personal cultivation under the above provision does not bring it under personal cultivation within a period of one year of such resumption or leaves the land fallow for more than a year, the previous cultivating tenant can apply for restoration. Provision has also been made for the execution of lease deeds in all cases of tenancy agreements entered into in future. The Revenue Divisional Officer's Courts have been made subordinate to the High Court so that aggrieved persons may have a remedy without recourse to a writ.

The other changes have all been set out very clearly in the report of the Select Committee and I need not enumerate them. The provisions of the Bill are now before the House for discussion.

* Printed as Appendix III on pages 70–82 infra.

21st September 1956]

MR. SPEAKER : Motion moved—

"That the Madras Cultivating Tenants Protection (Amendment) Bill, 1956 (L.A. Bill No. 10 of 1956), as amended by the Select Committee, be taken into consideration."

* SRI M. NARAYANA KURUP : The point which I wanted to raise was this. I considered it as something important since it raised a question of procedure. On the 14th instant, the agenda of 21st September 1956 was circulated to us stating that the Madras Cultivating Tenants Protection (Amendment) Bill, 1956, would be taken up on the 21st September 1956. Our Rule 106 says that the Bill as amended by the Select Committee and the report of the Select Committee shall be printed and circulated to the members of the Assembly and if the Committee decides they shall be printed in the gazette also. After this, the Minister in charge of the Bill may move that the Bill as amended by the Select Committee be taken into consideration. I am not here for raising the question of notice. The point now is whether it is in order to include a Bill, which is being considered by a Select Committee, in the Agenda when the report of the Select Committee and the Bill as amended by the Select Committee have not been circulated amongst the members.

MR. SPEAKER : I think the Select Committee had reported and the report had been signed. It naturally takes some time for printing. As a matter of fact it was given for printing only on the 18th instant. We are so to say racing against time. We want to do certain things within the prescribed time. Therefore under these circumstances, the agenda was published in advance in the hope that the Select Committee report would be ready.

THE HON. SRI C. SUBRAMANIAM : May I also point out that the House itself has considered it and has accepted the recommendation of the Business Advisory Committee that this matter should be considered first. When the House itself has thus considered it, I do not think the Hon. Member has any right to raise a point of order on this question.

* SRI C. KANDASAMY : கனம் தலைவர் அவர்களே, இப் பொழுது சபை முன்பாக பொது விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப் பட்டிருக்கும் 1955-ம் வருஷத்திய சாகுபடி செய்யும் குடியானவர் சட்டத் திருத்த மசோதாவைப் பற்றி சில விஷயங்கள் குறிப்பிட விரும்புகிறேன். 12-07 p.m.

1955-ம் வருஷத்தில் இந்தச் சட்டம் இயற்றப்பட்டபோது ஒரு வருஷத்திற்கே இந்தச் சட்டம் அமுலில் இருக்கும் என்று சொல்லப்பட்டதை நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். அதே சட்டம் இப்பொழுது இன்னும் இரண்டு வருஷ காலத்திற்கு நீடிக்கப்படுகிறது என்பதையும் ஞாபகத்தில் வைத்துக் கொண்டு பார்ப்போமேயானால் அரசாங்கத்திற்கு வேறு எந்த விரிவான நில சீர்திருத்தச் சட்டத்தையும் கொண்டு வரும் உத்தேசம் இல்லை போலிருக்கிறது என்பது தெரியவரும். காரணம் சென்ற ஆண்டிலே இந்தச் சட்டத்தைக் கொண்டு வரும்போது, "உடனடியாக நிலத்திலிருந்து வெளியேற்றப்படுகின்ற விவசாயிகளுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்காக இந்தச் சட்டத்தை அவசரமாகக் கொண்டு வருகிறோம். இது ஒரு வருஷத்திற்குத் தான் அமுலில் இருக்கும், அதற்குள்

திட்ட வட்டமான நிலச்சீர்திருத்தம் கொண்டு வர சர்க்கார் யோசிக்கிறது" எனச் சொன்னார்கள். ஆகவே முன்பு தற்காலிகமாகக் கொண்டு வரப்படும் சட்டம் எனத் திட்ட வட்டமாகக் கூறப்பட்ட இந்தச் சட்டம் இப்பொழுது இன்னும் இரண்டு வருஷ காலத்திற்கு ஏன் நீடிக்கப்படவேண்டும்? ஏற்கெனவே மிகவும் குழப்பமான நிலைமை ராஜ்யத்தில் நிலவுகிற காலத்தில் இந்த நீடிப்பைச் செய்து விட்டே வேறு நிலச்சீர்திருத்தம் கொண்டு வராமல் இருக்கலாம் என எண்ணுகிறார்கள் என்பது பச்சையாக இதிலிருந்து தெரிகிறது.

அடுத்தபடியாக இந்தச் சட்டத்தை இரண்டு வருஷ காலத்திற்கு அப்படியே நீடித்து இருந்தாலும் நாம் புரிந்து கொள்ளமுடியும். அந்தச் சட்டத்தை அப்படியே நீடிப்பதற்குப் பதிலாக சில புதுக் கொள்கைகளையும் புகுத்தி இப்பொழுது நீடிக்கச் செய்ய விரும்புகிறார்கள் என்பதைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். குத்தகை விஷயமாகவோ, இன்னும் சொந்தச் சாகுபடி எத்தனை வைத்துக் கொள்ளலாம் என்பதைப் பற்றியோ புது ஷரத்துக்கள் சேர்த்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். ஆனால் குறைந்த நிலச் சொந்தக்காரர்கள் தங்கள் நிலத்தை மீட்டுக்கொள்வதற்கு வேண்டிய வசதியை அளிக்கும் ஷரத்து ஒன்றைச் சேர்த்து இருக்கிறார்கள்.

விவசாயிகளைப் பாதுகாப்பதற்காகவும், அவர்கள் நிலங்களிலிருந்து வெளியேற்றப்படுவதைத் தடுப்பதற்காகவும் இந்தச் சட்டத்தைக்கொண்டு வருகிறோம் என 1955-ம் வருஷத்தில் கொண்டு வந்த சட்டத்தை திருத்தி இப்பொழுது இன்னும் இரண்டு வருஷங்களுக்கு நீடிக்கச் செய்யும்போது அந்தச் சட்டம் விவசாயிகள் நிலத்திலிருந்து வெளியேற்றும் சட்டமாக மாறிவிடும் என்றே சொல்ல வேண்டியிருக்கிறது.

ஏனென்றால் சிறு நில விவசாயிகளைப் பற்றியும், குடியானவர்களைப் பற்றியும் சொல்லி நீங்கள் எந்தப்பக்கத்தில் இருக்கிறீர்கள் என்று அங்கத்தினர்களுக்குக் கேள்வி போடுவதுபோல இந்தச் சட்டம் அமைக்கப்பட்டிருக்கிறது.

சிறு நிலச்சுவாந்தார்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட வேண்டுமானால் அவர்களிடம் குத்தகை வேலை செய்து கொண்டிருக்கிற விவசாயிகளின் நிலைமை என்ன? இந்தச் சட்டம் அவர்களுக்கு எப்படி பாதுகாப்பு அளிக்கும் என்பதையும் ஒட்டு மொத்தமாகப் பார்க்க வேண்டுமென்பது என் கட்சி.

சாதாரணமாக சிறு நில விவசாயிகளுக்குப் பாதுகாப்பு அளிக்கவேண்டுமென்று சொல்லும்போது அவர்களிடம் வேலை செய்கின்ற விவசாயிகளுக்கும் பாதுகாப்பு எப்படி அளிப்பது என்பதை நாம் சேர்த்தே யோசிக்க வேண்டிய கடமை இருக்கிறது. சிறு நிலச்சுவாந்தார்களிடம் வேலை செய்யும் குடியானவர்களுக்கும் புனர் வாழ்வு அளிக்கக்கூடிய வகையில் இந்த மசோதாவில் சில திருத்தங்களையும் கொண்டு வந்தால் சர்க்காரின் நல்லெண்ணத்தைப்புரிந்து கொள்ள முடியும். அல்லது ஒட்டு மொத்தமாக எல்லோரையும் ஞாபகத்தில் வைத்துக்கொண்டு எந்தத் தாப்பாருக்கும் பாதகம் இல்லாமல் ஒரு விரிவான நிலச் சீர்திருத்தத்தைக் கொண்டு வந்தாலும் அதை நாங்கள் ஆதரிக்கத் தயாராய் இருக்கிறோம். ஆனால் அப்படி நடவடிக்கை எடுக்காமல் "இந்தச் சட்டத்தினால் லட்சக்கணக்கான சிறு நிலச்சுவாந்தார்கள் பாதிக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு விதிவிலக்கு அளிக்கவேண்டும்" என்று சொன்னால் "அந்நிலங்களிலே வேலை செய்துவருகின்ற பல லட்சக்கணக்கான சிறு குடியானவர்களின் நிலைமை என்ன?" என்று கேட்கக்கூடியவர்களாகத்தான் நாங்கள் இருக்கிறோம். இந்தச் சட்டத்தினால் லட்சக்கணக்கான சிறு நிலக்காரர்கள் ஆதாயம் அடைவார்கள் என்றால் பல லட்சக்கணக்கான விவசாயிகள் நிலத்திலிருந்து வெளியேற்றப்படுவார்கள் என்பதை நாம் மறக்க முடியாது. இவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என்றால் அதற்குப் பதில் கிடையாது. சில பேர்கள்

21st September 1956] [Sri C. Kandasamy]

பேசுகின்றார்கள்; பத்திரிகையிலும் வெளியாகியிருக்கிறது. "சிறு நிலக்காரர்கள் ஜாஸ்தி" என்று. அந்த அளவுக்கு சிறு குத்தகை விவசாயிகளும் அதிகம் என்பது தான் உண்மை. வெளியேற்றப்படக் கூடிய ஏழை குடியானவர்களுக்கு மீண்டும் நிலம் கொடுத்து, அவர்கள் அதைச் சாகுபடி செய்து, வாழ்க்கையை நடத்துவதற்கு வேண்டிய ஒரு முறையைச் செய்து கொடுக்காமல், சிறு நிலச் சுவாந்தார்களுக்கு ஏதோ நன்மை செய்யப் போகிறோம் என்று கூறுவது பொருந்தாது. ஒரு பகுதியினருக்கு நன்மை செய்யப் போகிறோம் என்று சொல்லி இன்னொரு பகுதியினருக்குத் தீமை செய்யக்கூடிய ஒரு செய்கையில் தான் இது கொண்டு போய் விடுகிறது என்று திட்டவட்டமாக ஆட்சியாளருக்கு எடுத்துக் கூற விரும்புகிறேன். தஞ்சை, திருச்சி, அம்பாசமுத்திரம் போன்ற இடங்களில் நடக்கக் கூடிய மிரட்டல்களுக்குப் பயந்து, இந்தச் சர்க்கார் இத்தகைய செயலைச் செய்யுமானால் தேர்தல் காலங்களில் எந்த அளவுக்கு விவசாயிகள் மத்தியில் பெரியதொரு குழப்பத்தை ஏற்படுத்தும் என்று சொல்லத் தேவையில்லை. சர்க்காருடைய செய்கை விவசாயிகள் மத்தியில் ஒரு இளர்ச்சிக்குத் தூண்டுகோலாக இருக்கப் போகிறது என்று தான் சொல்ல வேண்டும். ஏதோ ஒரு பகுதியினருக்கு நன்மை செய்யப் போகிறோம் என்று சொல்லிக் கொண்டு, அதே சமயத்தில் இன்னொரு பகுதியினரை, தாங்கள் அறியாமலேயே பகைத்துக் கொள்ளப் போகிறார்கள் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

12-12 p.m.

நிலச் சீர்திருத்தத்திலே சொந்தச் சாகுபடிக்கு வரையறை ஏற்படுத்தி, அதிகப் படியான நிலத்தை கிராமத்தில் இருக்கக் கூடிய நிலமில்லா விவசாயிகளுக்குப் பிரித்துக் கொடுக்க வேண்டுமென்று சட்டம் வரும்போது, சிறு நிலச்சுவாந்தார்களுக்கு வசதி அளிப்பதைப் பற்றி பேசினால் அதை நாங்கள் புரிந்து கொள்ள முடியும். அதை நாங்கள் ஆட்சேபிக்கவில்லை. அதை நாங்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம். ஆனால், வெளியேற்றப்படும் விவசாயிகளுடைய தலைவிதியை நிர்ணயம் செய்யாமல், அவர்களுடைய கதி என்ன வென்பதைப் பற்றி சிந்தனை செய்யாமல், ஏதோ சிறு நிலச்சுவாந்தார்களை மட்டும் இன்றையதினம் காப்பாற்றினால் போதும் என்று சர்க்கார் கருதுவார்களானால், அந்த முறையில் காரியங்களைச் செய்வார்களானால், எந்த அளவுக்குப் பெருவாரியான விவசாயிகளுக்கு அந்தச் செய்கை பாதகம் விளைவிக்கும் என்று நான் சொல்லத் தேவையில்லை. சிறு நிலச்சுவாந்தார்களாகிய ஒரு குறிப்பிட்ட ஜனத்தொகைக்கு மட்டும் நன்மை செய்தால், பெருவாரியான ஜனத்தொகையினருக்குத் தீமை விளைவிக்கக் கூடிய செய்கையாகும் என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். இதையும் சர்க்கார் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

அதற்கடுத்தாற்போல் இன்றைய தினம் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தையும் மற்ற ராஜ்யங்களில் எடுத்திருக்கும் நடவடிக்கை இந்த இரண்டையும் சேர்த்து கவனிக்கவேண்டும். சிறு நிலச்சுவாந்தார்களுக்கு விதி விலக்கு அளிக்கும் விஷயத்தையும் நிலத்திலிருந்து வெளியேற்றப்படும் விவசாயிகளுக்கு உபரி நிலத்தைப் பிரித்துக் கொடுக்கும் விஷயத்தையும் சேர்த்தே அணுகுகிறார்கள் என்பதற்கு பஞ்சாப் சட்டத்தைப் பார்த்தால் புரியும் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அப்படிச் செய்வதை விட்டுவிட்டு, ஏதோ தேர்தலிலே வோட்டு வாங்கவேண்டுமென்ற குறுகிய நோக்கத்திலே இத்தகைய செய்கையைச் செய்தால், தேர்தலிலே அதனால் ஏற்படக்கூடிய பலாபலன் என்ன என்பதைப்பற்றி புரிந்துகொள்ளாத நிலைமையில், இருட்டிலே போவதைப் போன்ற ஒரு முறையிலே அரசாங்கத்தினுடைய செய்கை இருக்கிறது என்று தான் சொல்லவேண்டியிருக்கிறது.

அரசாங்கம் நியாயமாக நடக்க வேண்டுமானால், இந்தச் சட்டத்தை இரண்டு வருஷத்திற்கு நீடிக்க வேண்டிய அவசியமில்லை. ஒரு வருஷத்திற்கு நீடித்தால் போதும். ஒரு வருஷம் இடைக்காலத்தில் நிலச்சீர்திருத்தம் சம்பந்தமான பிரச்னைகளை யெல்லாம் கருத்தில் கொண்டு, விரிவான

சட்டம் ஒன்றைக் கொண்டு வரலாம். அப்பொழுது தேவையான மாறுதலைச் செய்யலாம். சொத்து உரிமை, அதிகப் பட்சம் ஒருவர் எவ்வளவு நிலம் வைத்துக் கொள்ளலாம் என்பதை நிர்ணயம் செய்வது, குத்தகை, வாரம் நிர்ணயம், ஆகிய விஷயங்களில் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு அஸ்திவாரமாக இருக்கக் கூடிய 80 சத விகித ஜனத் தொகையுள்ள விவசாயிகளுடைய வாழ்க்கையை மேம்படுத்துவதற்கும் அவர்கள் தங்களுடைய வாழ்க்கையை வகுத்துக் கொள்வதற்கும் அவசியமான சீர்திருத்தங்களை ஒட்டு மொத்தமாகக் கொண்டு வருவதற்கான வகையில் இந்த ஒரு வருஷ காலத்திற்குள் முடிவு செய்து கொள்ளலாம். ஆகவே இந்தச் சட்டத்தை ஒரு வருஷத்திற்கு நீடித்தால் போதும் என்று நாங்கள் கருதுகிறோம்.

பொறுக்குக் கமிட்டியில் பல விவாதங்கள் நடத்தியதன் காரணமாக ஐந்து ஏக்கர் வரை தங்களுக்கு இருக்கக் கூடிய சொத்தினை ஒரு பாதியைக் கூட்டிக்கொள்ளலாம் என்ற ஒரு நியந்தனை போடப்பட்டிருக்கிறது வாஸ்தவம். இருந்தாலும் சுட்டி, நான் ரெவின்யூ அமைச்சரைக் கேட்டுக் கொள்வது என்னவென்றால், நிலத்திலிருந்து வெளியேற்றப் படுபவர்கள் விஷயத்தில் சர்க்கார் என்ன செய்யப் போகிறார்கள் என்பது தான். சிறு நிலச்சுவான்தார்களுக்காக கண்ணீர் வடிக்கும் சர்க்கார், நிலத்திலிருந்து வெளியேற்றப்படுபவர்களுடைய விஷயத்தில் என்ன செய்யப் போகிறார்கள்? சிறு நிலச்சுவாந்தாரர்களுடைய நிலைமையை மேலும் கவனிக்க வேண்டும். அவர்களுக்கு ஆறுதல் மொழி சொல்ல வேண்டுமென்று நினைக்கும் சர்க்கார், உலகத்திலே ஒன்றுமே இல்லாத, உழைத்து சாகுபடி செய்தால் தான் ஜீவனம், இல்லாவிட்டால் வாழ்க்கை நடத்த முடியாது, மனிதவிமக்களைக் காப்பாற்ற முடியாது என்ற நிலைமையில் இருப்பவர்களைப் பற்றி ஏன் சர்க்கார் அக்கரை காட்டவில்லை என்று நான் கேட்க ஆசைப்படுகிறேன். இந்த சட்டத்தை ஒரு வருஷத்திற்கு நீடித்தால் போதும். இப்படி நீடிக்கும்போது அதில் வேறு எந்தக் கொள்கை சம்பந்தமான விஷயத்தையும் புகுத்தவேண்டிய அவசியமில்லை. சென்ற ஆண்டு 60, 40 வார விகிதம் நிர்ணயம் செய்யப்பட்டிருந்தும், விவசாயிகளுக்குக் கொடுக்க கூடிய வார விகிதத்தை 60-லிருந்து குறைக்க வேண்டுமென்ற முயற்சியில் ஒரு சிலர் ஈடுபட்டிருக்கிறார்கள். இப்பொழுது சிறு நிலச்சுவாந்தார்களுக்கு கண்ணீர் வடிக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

நிதி மந்திரி அவர்கள் செலக்ட் கமிட்டியில்கூட குறிப்பிட்டிருக்கிறார். ஒரு வேலிக்கு மேற்பட்ட குத்தகை நிலம் வைத்திருக்கக்கூடியவர்களை நியாய வார சட்டம் கட்டுப்படுத்தாது. ஏற்கனவே கொடுத்துவந்த வாரத்தைத்தான் கொடுத்துக்கொண்டு வரவேண்டுமென்று ஷரத்தைப் புகுத்திவிட்டு, ஐந்து ஏக்கருக்கு உட்பட்டு நிலம் வைத்திருப்பவர்கள் சொந்த சாகுபடிக்கு விவசாயிகளிடமிருந்து நிலத்தைத் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம் என்று ஷரத்தையும் கொண்டுவந்தால், அதனால் என்ன பலன் என்று அவரே கேட்டிருக்கிறார். ஒரு வேலிக்கு மேல் நிலம் வைத்துக்கொண்டு சாகுபடி செய்கிறவர்களை நியாய வாரச் சட்டம் கட்டுப்படுத்தாது, அதே சமயத்தில் ஐந்து ஏக்கருக்கு உட்பட்டு நிலம் வைத்திருப்பவர்கள் சொந்த சாகுபடிக்கு நிலம் பெற்றுக்கொள்ளலாமென்று சொன்னால் மிச்சம் என்ன இருக்கப் போகிறது என்று நிதி அமைச்சரவர்களே கேட்டார்கள்.

நிலமில்லாத சாகுபடியாளர்களுக்கு ஏதோ சௌகரியம் செய்யப் போவதாகச் சொல்லிக்கொண்டிருந்துவிட்டு, சிறு நிலச்சுவாந்தார்களுக்குச் சலுகை கொடுக்கவேண்டுமென்று இப்பொழுது சொல்லிக்கொண்டிருப்பதை பார்க்கும்போது, மிராசுதார்களுக்கு எந்த அளவுக்கு சர்க்கார் மீது செல்வாக்கு இருக்கிறது என்று சிந்திக்க வேண்டியிருக்கிறது. அவர்கள் எந்த அளவுக்கு பிரதிநிதித்வம் வகிக்கிறார்கள் என்பதும் நமக்குப் புரியும். கும்பகோணத்திலே மிராசுதார்கள் எப்படிக் கூச்சல் போடுகிறார்கள், ஆடு துரை சிறு நிலச்சுவாந்தார்கள் பல இடங்களிலே அமைச்சரவர்களைக் கண்டு பேசியிருக்கிறார்கள் என்பதும் நமக்குப் புரியும். இதெல்லாம்

21st September 1956] [Sri C. Kandasamy]

அரசியல் அரங்கத்திலே காலம் வரும்போது அரசாங்கம் புரிந்துகொள்ளத் தான் போகிறார்கள். நியாயத்தை அடிப்படையாக வைத்துக்கொண்டு பார்த்தால் சிறு நிலச்சுவாந்தார்களுக்கு விதி விலக்கு அளிக்கவேண்டுமா அல்லது வாழ்க்கையை நடத்துவதற்கே வழி இல்லாமல், நிலத்தில் சாகுபடி செய்வதொன்றையே வாழ்க்கைக்கு அஸ்திவாரமாக வைத்திருக்கும் சாகுபடியாளர்களுக்கு வழிவகை செய்யவேண்டுமா என்பதைப் பற்றி நன்கு கவனித்துப் பார்க்கவேண்டும். உபாத்தியாயர்கள், என்.ஜி.ஓக்கள்., சிறு தொழில் வைத்துக்கொண்டிருப்பவர்கள், விற்பனை வரி, வருமான வரி, தொழில் வரி செலுத்துபவர்கள் இவர்கள்பால் கவனம் செலுத்தும் சர்க்கார், உலகத்திலே தனக்கு என்று ஒன்றுமே இல்லாதவனுக்கு, பிழைப்புக்கு வழி இல்லாதவனுக்கு, 4, 5 மா நிலத்தின் மூலமாகத்தான் வாழ வேண்டுமென்று சொல்லக்கூடிய நிர்பந்தத்தில் இருக்கிறவனுக்கு, அதை வைத்துக்கொண்டுதான் மனைவி மக்களைக் காப்பாற்றவேண்டுமென்று இருக்கக்கூடியவனுக்கு சர்க்கார் அக்கறை காட்டவேண்டாமா? என்று நான் கேட்கிறேன். நாலு, ஐந்து ஏக்கர் நிலத்தைக் குத்தகைக்கு எடுத்தால், நிலச் சொந்தக்காரருக்குக் கொடுக்கவேண்டிய வாரத்தைக் கொடுத்துவிட்டு, மிஞ்சி நிற்கும் கொஞ்ச தானியத்தையும், மாட்டுக்குக் கொஞ்சம் வைக்கோலையும் மட்டுமே வாழ்க்கை நடத்த அஸ்திவாரமாக வைத்துக்கொண்டு வாழ்க்கையிலே போராடிக்கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட லட்சக்கணக்கான கோடிக்கணக்கான மக்களுடைய நிலைமையைப் பற்றி அக்கறைகாட்டாமல் பேசக்கூடிய போக்கு மிகவும் வருத்தப்படக் கூடியதாக இருக்கிறது.

நியாய வாரமசோதாவில், ஒரு வேலிக்குக் குறைவாக நிலம் வைத்துக் கொண்டிருப்பவர்களை இந்தச் சட்டம் பாதிக்காது என்று சட்டம் போட்டாய் விட்டது. ஐந்து ஏக்கருக்கு வட்பட்டு நிலம் வைத்திருப்பவர்கள் நிலத்தைத் திரும்பி எடுத்துக்கொள்வதற்கு உரிமை கொடுத்துவிட்டால், 60, 40, வார மசோதா விஷயம் மிராசுதார்களுக்கு சிறிது குறைந்து ஆறுதலாக இருக்கும். மிராசுதார்களும் இந்த சர்க்காருக்கு நேரடி விஷயத்தில் ஆதரவாக இருப்பார்கள் என்று சொல்லக்கூடிய எண்ணத்திலிருந்தான் இது செய்யப்பட்டிருக்கிறது, என்று நான் நிச்சயமாகக் குற்றம் சாட்டவேண்டியிருக்கிறது. தற்காலிக சட்டத்தை நடைமுறைப்படுத்தக் கொண்டுவரும் திருத்தத்தில் இம்மாதிரி அடிப்படையான கொள்கையைப் புகுத்தக்கூடியது ஆபத்தானது. இந்தமாதிரி போக்கு சரியல்ல. இது அரசாங்கம் விவசாயிகளுக்குச் செய்யும் துரோகம். 60, 40 வார நிர்ணயச் சட்டம் அமுலுக்கு வந்ததுடன் இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றி, தேசத்தின் புனருத்தாரணத்திற்கும், மக்களின் நல்வாழ்வுக்கும் அஸ்திவாரமாக இருக்கக்கூடிய விவசாயிகளுடைய ஒத்துழைப்பைக் கோரக்கூடிய முறையில் அரசாங்கம் சீர்திருத்தங்களைக் கொண்டிருக்கிறார்கள் என்று எண்ணிக் கொண்டிருக்கும் சமயத்தில், விவசாயிகளுக்கு நன்மை செய்யக்கூடிய முன்னேற்றகரமான சட்டத்தைத் தயக்கம் காட்டாமல் அரசாங்கம் செய்யப் போகிறார்கள் என்று நினைத்துக்கொண்டிருந்த சமயத்தில், யதார்த்தத்தில் சர்க்கார் அம்மாதிரி செய்யத்தயாராயில்லை என்று பார்க்கும்போது, விவசாய மக்களுடைய மத்தியிலே ஏமாற்றம் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. அரசாங்கம் யதார்த்தத்தில் மிராசுதார்களுக்குச் சாதகமாகவும் சிறு நிலச் சுவாந்தார்களைத் திருப்திபடுத்தக் கூடிய முறையிலும் செய்திருக்கக்கூடிய நடவடிக்கையாகத்தான் இருக்கிறது என்று நாங்கள் குற்றம் சாட்டவேண்டியிருக்கிறது.

அதிலே நிபந்தனை போடப்பட்டிருக்கிறது. மொத்த நிலத்தில் பாதியிலே ஐந்து ஏக்கருக்கு மேலே சொந்த சாகுபடிக்கு வைத்துக்கொள்ளக் கூடாது, வேறு நிலம் வைத்திருக்கக்கூடாது என்றெல்லாம் சொல்லப்படுகிறது. ஐந்து ஏக்கருக்கு மேல் சொந்த சாகுபடிக்கு இருக்கக்கூடாது, தொழில் வரி, விற்பனை வரி, வருமான வரி கட்டுபவர்களுக்கு விதிவிலக்குக் கிடையாது என்று சொல்வதெல்லாம் யதார்த்தத்தில் எப்படி வரும் என்று பார்க்க வேண்டும். ஒரு மிராசுதாருக்கு 50 இடங்களிலே நிலம் இருக்கலாம்

அதையெல்லாம் விவசாயி அறிந்திருக்க முடியாது. மிராசுதாருக்கு 50 ஏக்கர் நிலம் பல இடங்களில் இருக்கிறதென்பதையும் விவசாயி புரிந்துகொள்ள முடியாது. "இந்த ஊரிலே நான்கு ஏக்கர் நிலம் இருக்கிறது" என்று மிராசுதார் எழுதிக் கொடுப்பார். அதுதான் உண்மை என்று நம்ப வேண்டும். சமரச அதிகாரி, ரெவின்யூ கோர்ட்டார் தீர்ப்பு எப்படியிருக்கிறது என்பது தெரிந்த விஷயம். "இவர் வருமான வரி செலுத்துபவர் அல்ல" என்று ஒருவர் சொன்னால் அதையும் நம்பவேண்டியிருக்கிறது. யார் அதை ருசிப்பித்துக் கொண்டிருப்பது? இதையெல்லாம் ஏழை விவசாயிகள் எப்படி நிரூபிக்க முடியும்? இம்மாதிரி பிரச்னை இருக்கிறது. ஒவ்வொரு விஷயத்தை எடுத்துக்கொண்டாலும் சட்டத்திலிருந்து தப்பித்துக் கொள்வதற்கு கச்சிதமாகக் காரியங்கள் செய்யப்படும். உத்தியோகஸ்தர்களுடைய மனோபாவத்தையும் கணக்கில் கொள்ளவேண்டும். மிக மோசமான தீர்ப்புகள் பல சந்தர்ப்பத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதற்கு பல உதாரணங்களைக் கொடுக்கலாம். இதையெல்லாம் பார்க்கும் போது நீல மீட்சி உரிமை அளிப்பதன் மூலம் எந்த அளவுக்குக் குடியானவர்கள் நிலத்திலிருந்து வெளியேற்றப்படுவார்கள் என்பதை நாம் பார்க்க வேண்டும். குடியானவர்கள் நிலத்திலிருந்து வெளியேற்றமுலிருப்பதற்கான ஷரத்துக்களைப் பற்றியெல்லாம் அமைச்சரவர்கள் பதில் சொல்லும் போது குறிப்பிடலாம். ஆனால், சட்டத்திலே கண்டிருப்பதையெல்லாம் விவசாயிகள் எப்படி ருசு செய்வது என்பதுதான் பிரச்னை. சட்டத்தில் கண்டிருக்கக் கூடிய உரிமையை விவசாயிகள் பெறுவதற்கு வாய்ப்பு இல்லாத நிலைதான் இருக்கிறது.

12-22 p.m. இந்த மசோதா சிறு நிலச்சுவாந்தார்களுக்கு நன்மை பயக்கக்கூடியதாக இல்லை. இதனால் சிறு நிலச்சுவாந்தார்களுக்கும் விவசாயிகளுக்கும் இடையே சண்டையும் குழப்பமும் மூளும். இரண்டு பக்கத்துக்கு மிடையே சண்டையை மூட்டிவிடும் அரசியல் சூதாட்டம்தான் இது என்று கருதவேண்டியிருக்கிறது. சமூகத்தில் இருக்கக்கூடிய இரண்டு பேர்களுக்கும் பாதுகாப்பு அளிக்கக்கூடியதாக இல்லை இந்த மசோதா. அதற்கு மாறாக, இருவர் நலன்களும் ஒன்றுக்கு ஒன்று முரண்படக்கூடிய நிலைமையில் இந்த மசோதா இயற்றப்பட்டிருக்கிறது. சர்க்கார் மட்டும்தான் சிறு நிலச்சுவாந்தார்களுக்கு அபயகர்த்தாக்கள். நாங்கள் அவர்களுக்கு எதிராக குடியானவர்களுக்குச் சாதகமாகப் பேசுகிறோம் என்று வேண்டுமானால் சொல்லலாம். ஆனால் யதார்த்தத்தில் பார்க்கும்பொழுது, இந்த மசோதா நிலச்சுவாந்தார்களுக்கும் குடியானவர்களுக்குமிடையே விரோதத்தைத் வளர்க்கக்கூடிய நிலைமையில்தான் அமைந்திருக்கிறது என்பதை வருத்தத்துடன் நான் கூறிக்கொள்கிறேன். ஏற்கனவே இந்த சட்டம் ஒரு வருஷ காலம் அமுலில் இருந்திருக்கிறது. ஒரு வருஷம் கழித்து இப்பொழுதுதான் சிறு நிலச்சுவாந்தார்கள் கண்ணீர் விடுவதை அரசாங்கம் கண்டிருக்கிறது. அவர்கள் பட்டினி கிடந்து சாகும் காட்சி இவ்வளவு நாட்களாக இல்லாமல் இப்பொழுதுதான் சர்க்காருக்கு புலப்பட்டிருக்கிறது. இந்தத் திருத்தம் சிறு நிலச்சுவாந்தார்களை பாதுகாப்பதற்காகக் கொண்டு வரப்பட்டது அல்ல. வரப்போகும் 60, 40 வார சட்டத்தின் வேகத்தைக் குறைத்து பெரும் மிராசுதார்களுக்கு ஒரு வகையில் அபயம் அளிக்கும் நோக்கத்துடனேயே இது கொண்டு வரப்படுகிறது என்று கருதக்கூடிய நிலைமையில்தான் நாம் இருக்கிறோம்.

இந்த மசோதா சிறு நிலச்சுவாந்தார்களுக்கு பாதுகாப்பு அளிப்பதற்காக கொண்டுவரப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் யதார்த்தத்தில் என்ன நடக்கிறது? பெரிய மிராசுதார்கள் மனைவியின் சொந்த பணத்தைப் பெற்று கொண்டதாக 4, 5 பிள்ளைகளின் பேரில் தனித்தனியாக 4, 5 ஏகர் நிலங்களைப் பொய்ச் சாசனம் செய்துவிடுகிறார்கள். இம்மாதிரி நிலத்தைத் துண்டாடி பாகப்பிரிவினை செய்வதின் மூலம் அவர்கள் 100 ஏகர் வரையில் இம்மாதிரி சட்டங்களிலிருந்து விதிவிலக்கு தேடிக் கொள்ளுகிறார்கள். இரண்டு மூன்று வருஷங்களாக சப் ரிஜிஸ்ட்ரார் ஆபீசில் தாக்கலாகியிருக்கும் பாகபத்திரங்களையும் சாசனங்களையும் பரிசீலனை

21st September 1956] [Sri C. Kandasamy]

செய்து பார்த்தால் இது நன்றாக விளங்கும். இம்மாதிரி சாசனங்களும் பாகபத்திரங்களும் அனந்தமாக இருக்கின்றன. இந்த ஒரு வருஷத்திலே தமிழ் ஜில்லாக்களிலே இந்தப் பாதுகாப்புச் சட்டம் எவ்வளவு வெளியேற்றத்தைத் தடுத்திருக்கிறது, எவ்வளவு விவசாயிகளுக்கு பாதுகாப்பு அளித்திருக்கிறது, எவ்வளவு மனுக்கள் தாக்கலாகியிருக்கின்றன, எவ்வளவு தீர்ப்பு கூறப்பட்டிருக்கின்றன என்பதையெல்லாம் அரசாங்கம் பரிசீலித்துப் பார்க்கவேண்டும். இரண்டு பக்கத்துக்கும் நன்மை அளிக்கக் கூடிய விவசாய சீர்திருத்தங்களையே அரசாங்கம் கொண்டுவர முன்வர வேண்டும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

நான் ஒன்று குறிப்பிடுகிறேன். நான் பயமுறுத்துவதாக நினைக்க வேண்டாம். நான் பயமுறுத்துவதற்காகச் சொல்லவில்லை. யதார்த்தமான சூழ்நிலையை எடுத்துக்கூற விரும்புகிறேன். சர்க்காரின் போக்கு வேளியே பயிரை அழிக்கக்கூடிய போக்காக இருக்கிறது. சர்க்காரே இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபட்டால், விவசாயிகள் தங்களுடைய நிலைமையை பாதுகாத்துக்கொள்ளுவதற்கு ஒன்று சேர்ந்து கொண்டு இன்றைய தினம் தாங்கள் உழுவதற்கு நிலம் கிடைப்பதற்காக ஒரு சூழ்நிலையை ஏற்படுத்திக் கொள்ள தீவிரமான போராட்டத்தில் ஈடுபடக்கூடும். கிராமத்தில் இருக்கக் கூடிய அடிப்படையான பொருளாதார நிலைமையை ஊக்குவிக்கக்கூடிய நடவடிக்கைகளை சர்க்கார் எடுத்தால்தான் விவசாயிகளுக்கு சர்க்காரிடம் நம்பிக்கை பிறக்கும். சர்க்கார் தங்களுடைய காரியங்களை சரிவர கவனித்து வருகிறார்கள் என்று நம்பிக்கை அவர்களுக்கு ஏற்படும். இல்லையேல், விவசாயிகள் தங்கள் நிலங்களை பாதுகாத்துக்கொள்ள ஜீவமான போராட்டத்தில் இறங்கவேண்டிய நிலைமை ஏற்படும். சர்க்காரே இந்த திருத்த மசோதாவைக் கொண்டுவந்திருப்பது அவர்களுடைய பாரபட்சமான போக்கை உணர்த்துவதாகவே இருக்கிறது. ஒரு பக்கத்தை மட்டும் பார்த்து, மறு பக்கத்தை பார்க்காமலே ஒருக்கக்கூடிய போக்காகத்தான் இருக்கிறது இது. இந்தப்போக்கைப் பயன்படுத்திக்கொண்டு பெரிய மிராசுதார்கள் ஆயிரக்கணக்கான விவசாயிகளை பாதிக்கக்கூடிய அளவில் நிலத்தை ஒன்று திண்டாகப் பிரித்து பிள்ளைகளின் பெரிலும் பேரப்பிள்ளைகளின் பெரிலும் சாசனம் செய்துக்கொண்டு வருகிறார்கள். இது கிராமத்தில் ஒரு குழப்பமான நிலைமையை உண்டாக்கிவிடும். அறிந்தோ, அறியாமலோ சர்க்கார் இந்த நடவடிக்கையில் இறங்கியிருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டை நான் சொல்ல வேண்டியிருக்கிறது.

இந்தத் திருத்த மசோதாவில் விற்பனை வரி தொழில் வரி, வருமான வரி செலுத்துபவர்கள் நிலத்தை விவசாயிகளிடமிருந்து மீட்டுக்கொள்ள முடியாது என்று விதி ஒன்று இருக்கிறது. ஆனால் வீட்டு வரி கொடுப்பவர்கள் இதில் சேர்க்கப்படவில்லை. இதனால் ஜில்லாக்களிலுள்ள மிராசுதார்கள் நிலங்களை விற்று அதற்கு பதிலாக ஏராளமாக வீடுகளை வாங்கிப் போடுகிறார்கள். ஜில்லாக்களில் எந்த விதமான தொழில் அபிவிருத்தியும் ஏற்படாததினால் நகர்ப் புறங்களிலே வீடுகளை வாங்குகிறார்கள். நிலத்துக்குப் பதில் வீடு வேணடுமென்றே பேரம் செய்து, நிலத்தை விற்று வீடாக மாற்றிவிடுகிறார்கள். ஆகையால், வீட்டு வரி கொடுப்பவர்களையும் இதில் சேர்த்துக்கொள்ளப்படவேண்டும். இதை அரசாங்கம் கவனிக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இந்த மசோதா கிராமங்களில் அமைதியை ஏற்படுத்துவதற்குப் பதிலாக அமைதியின்மையை ஏற்படுத்தக்கூடிய நிலைமையில்தான் இயற்றப்பட்டிருக்கிறது. இது விவசாயிகளை ஏராளமாக வெளியேற்றுவதற்கு லைசென்ஸ் கொடுக்கும் தன்மையில்தான் அமைந்திருக்கிறது என்று என்னுடைய பொதுவான அபிப்பிராயத்தைத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய இடத்தில் அமர்கிறேன். வணக்கம்.

Sri G. NARAYANASWAMY NAIDU : கனம் சபைத் தலைவர் அவர்களே, நிரம்பவும் நல்லது செய்வதாக மனதிலே நினைத்துக்கொண்டு சர்க்கார் இந்த மசோதாவைக் கொண்டுவந்திருக்கிறார்கள். எங்கள் 12-30 p.m.

[Sri G. Narayanaswamy Naidu] [21st September 1956

ஜில்லாவிலே ஏற்கனவே அமுலில் இருக்கும் இந்த சட்டம் எந்த மாதிரி நடைபெறுகிறது என்பதைப் பற்றி பல தடவைகள் இந்தச் சபையிலே எடுத்துச் சொல்லியிருக்கிறேன். ஒரு வேலி நிலத்துக்கு மேற்படாமல் நிலம் வைத்திருப்பவர்கள் இந்தச் சட்டத்தினால் சௌகரியமடைவார்கள் என்று சர்க்கார் கருதியிருந்தால் அது பிசகு. பல உண்மை விஷயங்களை யெல்லாம் கன்சிலியேஷன் ஆபீஸர்களின் சிபார்சுகளின் காரணமாகவோ அல்லது வேறு எந்த நலங்களின் காரணமாகவோ. உழவர்களின் உரிமைகளை அழுத்திவிட்டிருக்கிறார்கள். கொஞ்ச நஞ்சம் நிலம் வைத்திருக்கும் விவசாயிகளையும் போலீஸார் மிகவும் தொந்தரவு செய்கிறார்கள். இதுவரை திருடாதவர்களுக்கு திருட்டுப் பட்டம் கட்டுகிறார்கள். கிரிமினல் குற்றவாளியாக்குகிறார்கள். இதையெல்லாம் சகிக்க முடியாமல் விவசாயி தனக்கு நிலம் வேண்டாம், வீட்டில் சும்மா இருந்தால் போதும் என்று நினைக்கக்கூடிய நிலைமை எங்கள் பகுதியில் ஏற்பட்டுவிடுகிறது. வேண்டுமானால் இதற்காக ஒரு கமிட்டி ஏற்படுத்தினால் சர்க்கார் மனம் சங்கடப்படக்கூடிய பல சம்பவங்களை நான் அத்தாட்சி பூர்வமாக எடுத்துக் காட்டமுடியும்.

சில நிலச்சுவாந்தார்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்பதெல்லாம் பொய். ராமாயணத்தில் அனுமான் ஆஞ்சனேயராகவாக விஸ்வரூபம் எடுத்து இருந்தாலும், அசோக வனத்துக்குப் போகும்பொழுது சிறிய உருவத்தோடு எதிரிகளுக்கு காட்சி அளித்ததாகக் கூறப்படுகிறது. அதேபோல்தான் பெரிய மிராசுதார்களும் சிறு உருவத்தோடு சிறு நிலச்சுவாந்தார்கள் என்ற "பாட்ஜை" போட்டுக்கொண்டு மந்திரிகளை பேட்டி கண்டிருக்கிறார்கள். பத்திரிகைகள் அதை பூதக்கண்ணாடி போட்டு பிரசாரம் செய்வதால், அவர்கள் இன்னும் தடபுடலாக ஆர்பாட்டம் செய்துகொண்டிருக்கிறார்கள்.

சிறிய மிராசுதார்களுக்கு பாதுகாப்பு வேண்டாம் என்று யாரும் சொல்ல முடியாது. அவர்கள் ஐந்து ஏக்கர் வைத்திருந்தால், ஒரு பாதிய விவசாயிடமிருந்து சொந்த சாகுபடிக்கு மீட்டுக்கொள்ளலாம் என்று சொல்லுவது ஜாண்டோ கெட்ட வழக்காகத்தான் இருக்கும். 150 குழி நிலத்தை வைத்துக் கொண்டு கட்டுப்படியாகக் கூடிய முறையில் உழுது பயிரிடமுடியாது. சாகுபடியாளரைப் பற்றியவரை அவர்களுக்கு வேறு தொழில் இல்லாததால், பாதி நிலத்தை வைத்துக்கொண்டு மீதியை நிலச்சுவாந்தாருக்குக் கொடுத்துவிட்டால், இரண்டு பேரும் எதையும் உருப்படியாக
12-32 p.m. செய்யமுடியாத நிலைமைதான் ஏற்படும். ஆகவே, நல்லெண்ணத்துடனேயே ஒரு தவறு செய்யும் நிலையில் சர்க்கார் இருக்கிறார்கள். ஆனால், இரண்டு பேருக்கும் பாதகமில்லாதபடி இந்தத் திருத்தத்தை நிறைவேற்ற வேண்டுமானால் அது இந்த சந்தர்ப்பத்தில் அல்ல. ஒரு நிலச்சுவாண்தார் அதிகப்படியாக எவ்வளவு நிலம் சொந்த சாகுபடிக்கு வைத்துக்கொள்ளலாம் என்று வரம்பு நிர்ணயித்து சட்டமியற்றும்போது அதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். இதுவரை வந்துள்ள நிலச் சட்டங்கள் எவ்வாறு அமல் நடத்தப்படுகிறது என்பதைப் பரிசீலனை செய்த பிறகு தகுந்த திருத்தங்களுடன் சட்டமியற்றினால், அரசாங்கத்தின் நல்லெண்ணம் உழவரிடத்தில் நல்ல முறையில் பிரதிபலிக்கும். இப்போது ஏழை விவசாய மக்களின் நிலைமையையும், அவர்களுக்கு இருக்கும் நம்பிக்கையும் நிலச் சட்டம் வருவதற்கு முன்பிருந்ததை விட மோசமாகிவிட்டது. சட்டம் வருவதற்கு முன்பு 50 அல்லது 100 சாகுபடியாளர்கள் இருந்த இடங்களிலெல்லாம் இப்போது 5 அல்லது 10 பேர்கள்தான் இருக்கிறார்கள். காரணம் மற்றவர்களையெல்லாம் மிராசுதார்கள் நிலத்தை விட்டு வெளியேற்றிவிட்டார்கள். இதையெல்லாம் தடுப்பதற்குத் தகுந்தபடி சர்க்கார் சட்டமியற்றவில்லை. ஒரு சம்பவத்தைப் பற்றி நான் இப்போது குறிப்பிட விரும்புகிறேன். தேரமுந்தூர் என்ற இடத்தில், நிலங்களையெல்லாம் சாகுபடியாளர்கள் நிலச்சுவாந்தாரர்களுக்குத் திருப்பித் தந்துவிட வேண்டும், இல்லாவிட்டால் போலீஸ் வழக்குத் தொடரப்படும் என்று தண்டோராப் போடப்பட்டு, சாகுபடியாளர்களிடமிருந்து நிலங்களெல்லாம் பறிக்க முயற்சிக்கப்பட்டது. சாகுபடியாளர்களுடைய வீடுகளை யெல்லாம் மிராசுதார்கள்

21st September 1956] [Sri G. Narayanaswamy Naidu]

கட்டுப்பாடாக வெட்டி யெறிந்திருக்கிறார்கள். இது சம்பந்தமாக ஆயிரக் கணக்கான தந்திகள் அதிகாரிகளுக்கு அடிக்கப்பட்டன. ஆனால் இன்று வரையிலும், இடிக்கப்பட்ட வீடுகளை கண் துடைப்புக்காக கூட அதிகாரிகள் வந்து பார்க்கவில்லை. மேலும், அங்கேயுள்ள கோவில் தேர் ஒன்று கொளுத்தப்பட்டது. "வீடுகள் இடிக்கப்பட்டதைப் பற்றி புகார் கூறினால், தேரைக் கொளுத்தியது நீங்கள்தான் என்று வழக்குத் தொடர்ந்து விடுவோம்" என்று வீடிழந்தவர்களை மிராசுதார்கள் பயமுறுத்தி வருகிறார்கள். இன்றுவரையிலும் அந்த சாகுபடியாளர்கள் இடிந்த வீடுகளிலேயே வாசம் செய்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த மாதிரி பல சம்பவங்களை பற்றி கூறமுடியும். அவைகளுள்ள கலெக்டர் கூட சில இடங்களில் சென்று சமாதானம் செய்துவைத்தார். அம்மாதிரி சமாதானம் செய்துவைத்த இடங்களில்கூட வயிலிகளுக்கு மிராசுதார்கள் தண்ணீர் விடுவதில்லை. இம்மாதிரி மேலும் மேலும் அக்கிரமங்கள் நடந்து வருவதால், இத்தகைய திருத்தங்களால் பயன் ஏற்படும், என்று நான் நினைக்கவில்லை. ஆதலால் சர்க்கார் இந்த விஷயத்தை நன்கு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

Sri M. PALANIYANDI : கனம் சபாநாயகர் அவர்களே, இப்போது சபையில் விவாதத்தில் இருக்கும் திருத்த மசோதாவை, சட்டத்தின் ஓராண்டு அமலுக்குப் பிறகு இன்னும் சிறிது காலம் நீடிப்பதற்கான திருத்தத்தோடு சர்க்கார் கொண்டு வந்திருக்கிறார்கள். உண்மையாக ஒரு முழு நிலச் சட்டத்தைக் கொண்டு வருவதற்காகத் தான் இந்தச் சட்டத்தின் ஆயுட்காலம் நீடிக்கப்படுகிறது என்று கனம் ரெவின்யூ அமைச்சர் கூட முன்பு இந்த மசோதாவைக் கொண்டு வந்தபோது கூறினார். நல்லதொரு நிலச் சட்டம் கொண்டு வர வேண்டுமென்று இந்த ராஜ்யத்திலுள்ள மக்கள் மட்டுமல்லாமல் இந்தியா பூராவிலுமுள்ள மக்களெல்லோரும் பேராவலுடன் பிறகு நிலச் சட்டம் கொண்டு வர வேண்டுமென்பதை திட்டக் கமிஷன் கூட ஒப்புக்கொண்டிருக்கிறது. இதெல்லாம் நமக்கு நன்றாகத் தெரிகிறது. ஒட்டு மொத்தமாக நல்ல தொரு நிலச் சட்டம் கொண்டு வர வேண்டுமென்று தான் நாம் எல்லோரும் விரும்புகிறோம். சின்னச் சின்ன நிலச் சட்டங்களைக் கொண்டுவருவதால் நிச்சயமாக அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் தொந்தரவு ஏற்படுகிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. சட்டத்தை ஓராண்டு காலத்திற்கு நீடித்த பிறகு நன்கு ஆலோசனை செய்து நல்ல தொரு சட்டத்தைக் கொண்டு வந்தால்தான், நடுத்தர விவசாயிகளுக்கும் குடியான வேலை செய்யும் விவசாயிகளுக்கும் நாம் நன்மை செய்ய முடியுமே தவிர, இம்மாதிரி சட்டத்தை நீடிக்கும் காலத்தில் திருத்தங்களைக் கொண்டு வந்தால் லட்சக்கணக்கான விவசாய மக்கள் பாதிக்கப்படுவார்கள் என்பது நிச்சயம். நடுத்தர விவசாய மக்கள் பாதிக்கப்படாமலிருக்க வேண்டுமென்பதற்காக அளிக்கப்படும் விதி விலக்கினை காணமாக பல ஆயிரக்கணக்கான விவசாயிகள் நிலங்களை விட்டு வெளியேற்றப்படுகிறார்கள். நடுத்தர விவசாய மக்களுக்குப் பாது காப்பு அளிக்க வேண்டும் என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆனால் அதற்கான விதியை வகுக்கும் முறையில் தான் அபிப்பிராய பேதம் இருக்கிறது. நில உடமைக்கு வரம்பு [சீலிங்] நிர்ணயித்து விட்டு இந்த ஏற்பாட்டைச் செய்தால் நன்றாக இருக்கும்.

12-36 p.m.

இப்போது பெரும்பாலான கிராமங்களில் சிறிய நிலச்சுவான்தார்கள் தான் அதிகம். ஆகவே சிறிய நிலச்சுவான்தார்கள் தங்களுடைய சொந்தச்சாகுபடிக்கு ஒரு குறிப்பிட்ட அளவு நிலத்தை சாகுபடியாளரிடமிருந்து திரும்பப் பெற்றுக் கொள்ளலாம் என்று திருத்தம் கொண்டு வருவது ஏழை சாகுபடியாளர்களை பாதிக்கும். தொழில் வரி, அல்லது வருமான வரி அல்லது விற்பனை வரி கட்டுபவர்களுக்கும், 13½ ஏக்கர்களுக்கு மேல் நஞ்சை நிலம் வைத்துக் கொண்டிருப்பவர்களுக்கும் இந்த விதி விலக்கு செல்லுபடியாகாது என்று சொல்லலாம்; ஆனால் இவைகளினாலெல்லாம் ஏழை சாகுபடியாளர்களுக்கு ஒரு பாதுகாப்பும் ஏற்படாது. சட்டத்தின் ஆயுட்

[Sri M. Palaniyandi] [21st September 1956

காலத்தை இன்னும் ஒரு வருஷம் நீடித்த பிறகு நடுத்தர விவசாயிகளுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்கானபடி முழு நிலச் சட்டம் கொண்டு வரலாமே தவிர, இப்போது இந்தச் சட்டத்தில் திருத்தங்கள் கொண்டு வந்தால் எல்லா விவசாயிகளும் பாதிக்கப்படுவார்கள். கிராமத்திலிருந்து நேரிடையாக விவசாயத்தை கவனித்து வருபவர்கள் குத்தகைக்கு விட்டிருக்க மாட்டார்கள். பத்து அல்லது ஆறு ஏக்கர்களை யுடைய சிறிய நிலச்சுவான்தார்கள் குத்தகைக்கு விட மாட்டார்கள். கிராமங்களிலிருந்து நேரிடையாக சாகுபடி செய்யும் நிலச்சுவான்தார்கள் குத்தகைக்கு விட மாட்டார்கள். சில சோம்பேறிகள்தான் குத்தகைக்கு விட்டிருப்பார்கள். நிலத்தில் உழுவது கௌரவக் குறைவு என்று கருதுபவர்கள் தான் குத்தகைக்கு விட்டிருப்பார்களே தவிர மற்றவர்கள் பண்ணை வைத்துப் பயிர் செய்து கொண்டிருப்பார்கள். நகரப்புரங்களில் வசிப்பவர்கள் தான் குத்தகைக்கு விட்டிருப்பார்கள். நகரப்புரங்களில் இருப்பவர்கள் பலர் ரூபாய் 10,000-க்கு மேல் வியாபாரம் செய்யாததால் விற்பனை வரி கட்டாமல் இருக்கலாம். அவர்களுக்கு விதி விலக்கு கொடுப்படியாகிறது. எந்தச் சட்டத்தை எடுத்துக்கொண்டாலும் விதி விலக்கு அளிக்கப்படுகிறது. இந்த மசோதாவில் அளிக்கப்படும் இந்த விதி விலக்கைப் பற்றிச் சொல்லும்போது, ஒரு விதவையின் நிலைமையைக் கருத்தில் கொண்டு, அம்மாதிரியான நிலச் சொந்தக்காரர்களுக்குப் பாதுகாப்பளிப்பதற்காக இந்த விதிவிலக்கு அவசியம் என்று சிலர் சொல்லுகிறார்கள். பலருக்கு நன்மையளிக்கக்கூடிய பெரிய சட்டங்கள் வரும்போது சிலருக்கு கஷ்டம் தான் ஏற்படும். ஆகவே இம்மாதிரி விதிவிலக்கு அளிப்பது சரியல்ல என்றும், இப்படி விதி விலக்கு அளிக்கப்பட்டால் ஆயிரக்கணக்கான ஏழை சாகுபடியாளர்கள் நிலங்களிலிருந்து வெளியேற்றப்பட்டு மிகவும் கஷ்டப்படுவார்கள் என்றும் சொல்லிக்கொள்கிறேன். திருத்தத்தின்படி நான்கு ஏக்கர், இரண்டு ஏக்கர், ஒரு ஏக்கர் நிலம் வைத்துக்கொண்டிருப்பவர்கள் பாதி அளவு நிலத்தை சொந்த சாகுபடிக்குத் திரும்பப் பெறலாம், ஒரு ஏக்கர் நிலம் வைத்துக் கொண்டிருக்கும் நிலச்சுவான்தாரரை ஏக்கரைச் சொந்த சாகுபடிக்குப் பெற்றுக்கொண்டால், அந்த அரை ஏக்கரில் எப்படி விவசாயம் செய்ய முடியும்? கிராமப் பொருளாதாரத் தரத்தின்படி அரை ஏக்கர் நிலத்தை ஒருவர் விவசாயம் செய்வதற்கு வைத்துக் கொள்ள மாட்டார்; அது முடியாது. பொறுக்குக் கமிட்டியில் கூட, இந்த விதி விலக்குக்கு உட்பட்டவர்கள் குறைந்த பட்சம் இரண்டு ஏக்கர் உடையவராக இருக்க வேண்டும் என்று நிர்ணயிக்க வேண்டும் என்று கூறினோம்; அதையும் ஏற்றுக் கொள்ள வில்லை. நில உடைமைக்கு வரம்பு கட்டாமல் இந்த சமயத்தில் இந்த விதி விலக்கை அளிப்பதானது, விவசாயிகளுக்கு நன்மை செய்ய வேண்டுமென்ற சர்க்காரின் நல்லெண்ணத்தைப் பொய்ப்பிக்கத்தான் செய்யும். ஆகவே, இப்போது திருத்தங்கள் எதுவுமின்றி இந்தச் சட்டத்தின் ஆயுளை இன்னும் ஓராண்டு காலத்திற்கு நீடிப்பதை மட்டும் செய்ய வேண்டும், என்றும், பிறகு புனராலோசனை செய்து நல்லதொரு நிலச் சட்டம் கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கெட்டுக் கொள்கிறேன்.

இப்பொழுது திருச்சினாப்பள்ளி ஜில்லாவில் ஒவ்வொரு தாலூகாவிலும் ரெவின்யூ கோர்ட்டுகளில் நில வெளியேற்றம் சம்பந்தமாக மூவாயிரம், நாலாயிரம் வழக்குகள் தொடரப்பட்டிருக்கின்றன.

12-42 p.m. சமரச அதிகாரி கோர்ட்டுகளிலும், தாசில்தார் கோர்ட்டுகளிலும் ரெவின்யூ அதிகாரிகள் கோர்ட்டுகளிலும் போய் பார்த்தால் எவ்வளவு வெளியேற்ற கேஸ்கள் நடந்து வருகின்றன என்பது நன்றாகத் தெரியும். கடந்த ஐந்து வருஷங்களில் எவ்வளவு கேஸ்கள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன என்பதும் நன்றாகத் தெரிய வரும். அதன் பிறகு எவ்வளவோ நில வெளியேற்றங்கள் நடை பெற்றிருக்கின்றன. அறுபது நாற்பது என்ற சட்டம் வரப்போகிறது என்று தெரிந்தவுடன் எவ்வளவோ சிறு நிலச்சுவான்தார்கள் தங்களுடைய நிலங்களை விட்டு குடியானவர்களை

21st September 1956] [Sri M. Palaniyandi]

வெளியேற்றியிருக்கிறார்கள். அவர்களுக்கு தகுந்த பாதுகாப்பு அளிக்க வேண்டியது நம்முடைய கடமையாகும். அறுபது நாற்பது என்ற சட்டம் வந்தால் குடியானவர்களுக்கு அதிகப்படியான பங்கு கொடுக்கும்படியான நிலைமை ஏற்பட்டு விடும் என்று பயந்துகொண்டு இப்பொழுதே விவசாயிகளை நிலங்களை விட்டு வெளியேற்றிக் கொண்டிருக்கிறார்கள். இந்தச் சட்டம் அப்படி வெளியேற்றுவதற்கு காரணமாக இருக்கக் கூடாது என்று சர்க்காரை நான் கேட்டுக் கொள்ளுகிறேன். இதற்குத்தான் தகுந்த வழி வகை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இதன் காரணமாக வேலை இல்லா திண்டாட்டம் கூட அதிகமாக ஆகியிருக்கிறது. விவசாயிகள் சொல்வதெல்லாம் "எங்களுக்கு அறுபது நாற்பது என்று கொடுக்க வேண்டியது அவ்வளவு அவசியம் இல்லை, எங்களுக்கு வேலைதான் வேண்டும், நாங்களே பிழைத்துக் கொண்டு சம்பாதித்துக் கொள்ள வேண்டும்" என்றுதான் சொல்லுகிறார்கள். விவசாயிகள் தற்போது வேலை செய்வதற்கு தயாராக இருக்கிறார்கள். குறைந்த வரும்படி வந்தாலும் அவர்கள் வேலை செய்யத் தான் தயாராக இருக்கிறார்கள். வரும்படிதான் தங்களுக்கு வேண்டும் என்றும் சொல்லுகிறார்கள். நிலம் இருந்தால் போதும் என்றுதான் சொல்லுகிறார்கள். அதனால் அவர்களை நிலத்தை விட்டு வெளியேற்றக் கூடாது என்று கேட்டுக் கொண்டு அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நான் சர்க்காரைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

விவசாயிகள் போராடியதன் பேரில் தான் தஞ்சை பண்ணையாள் சட்டம் வந்தது. அதன் பிறகு விவசாயிகளுக்கு பல விதமான சட்டங்கள் வந்து கொண்டிருக்கின்றன. இது விஷயமாக எவ்வளவு கஷ்டங்கள் விவசாயிகளுக்கு ஏற்பட்டுக் கொண்டு வருகின்றன என்பது கனம் அமைச்சர்களுக்கு தெரியாதது இல்லை. விவசாயிகள் இப்பொழுது என்ன சொல்லுகிறார்கள் என்றால் ஏதாவது சத்த விதமாவது குறைத்துக் கொள்ளுங்கள் அதைப்பற்றி கவலை இல்லை, அதற்கு சம்மதம்தான். ஆனால் தங்களை நிலங்களை விட்டு வெளியேற்றக் கூடாது என்றுதான் சொல்லுகிறார்கள். இப்பொழுது வரக் கூடிய சட்டம் அவர்களை மிகவும் பாதிக்கும். அப்படி இல்லாமல் அவர்களுக்கு ஆவன செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளுகிறேன். பழைய சட்டமே இருக்க வேண்டும் என்றும் திருத்தம் வேண்டாம் என்றும் நான் கனம் ரிவினியூ மந்திரி அவர்களை மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

காங்கிரஸ் கட்சியிலேயே சில முற்போக்குள்ளவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு இது விஷயம் நன்றாகத் தெரியும். இப்போழுது சட்டம் வரப் போவதனால் நிலத்தை விட்டு எவ்விதம் விவசாயிகள் வெளியேற்றப்படுகிறார்கள் என்பது தெரியும். காங்கிரஸ் கட்சியிலுள்ள கனம் ஆறுமுகம் அவர்கள் கூட இதைப்பற்றி கூட்டுக் கமிட்டியில் எடுத்துச் சொல்லியிருக்கிறார். இந்த சட்டம் வந்தால் விவசாயிகளுடைய கதி என்னவாகும் என்று கூட அவர் எடுத்துச் சொல்லியிருக்கிறார். கனம் நாராயணசாமி நாயுடு கூட இதைப்பற்றி நன்றாக எடுத்துச் சொல்லியிருக்கிறார். அவர்கள் எல்லோரும் விவசாயிகளுடன் பழகக் கூடியவர்கள். விவசாயிகளுடைய நிலைமை அவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஆகவே இதை மறுபடியும் பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். நாளை தினம் காங்கிரஸ் கட்சிக் கூட்டம் நடக்கப் போகிறது. அப்பொழுதாவது இதைப்பற்றி மறு பரிசீலனை செய்து இதைக் கொண்டுவர வேண்டாம் என்றும் பழைய சட்டத்தையே மறுபடியும் நீடிக்க வேண்டும் என்றும் தீர்மானம் செய்யும்படியாகக் கேட்டுக் கொள்ளுகிறேன். இது ரொம்பவும் முக்கியமான விஷயம். ஆகவே இந்தச் சட்டத்தை இப்பொழுது கொண்டு வராமல் பழைய சட்டத்தையே மறுபடியும் ஒரு வருஷத்திற்காகவாவது நீடித்து வைக்க வேண்டும் என்று மறுபடியும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

* SRI M. NARAYANA KURUP : Mr. Speaker, Sir, naturally enough the Hon. the Revenue Minister referred to the importance 12-45 p.m.

[Sri M. Narayana Kurup] [21st September 1956

of the amendment, because now practically this has overshadowed the original Bill. Sir, the South has been one of the regions which has lagged behind in the matter of agrarian reforms which have been commended by high authorities. Our neighbouring States of Hyderabad, Mysore, and others, have stolen a march over us, but we are still far behind. Time was when this State was an example to others in the matter of beneficial legislation, and they imitated us. But to-day we refuse to imitate the good things that are done by other States even long afterwards. I concede that agrarian reforms have various phases. I do not mind even if the whole problem is not tackled under a single Bill. But my point is that the different measures and the different Bills must be brought forward simultaneously so that we can have a comprehensive view of things and know how one affects the other. In this matter, our Government spokesmen were proclaiming that comprehensive agrarian reforms were almost ready and that the House may expect such measures at any moment. But time and again they have come forward with piecemeal legislations satisfying none. About the principle that is underlying this amendment, we find from the trend of debate that there is no substantial difference of opinion. Therefore, if the Members oppose this provision, it is for the Government to think why there is this opposition. It is evident that it is there, because agrarian reforms are brought in on a piecemeal manner and in the wrong context. Sir, land is limited and our population is increasing. There is great pressure upon land, and many of the abuses in land tenures existing to-day are due to pressure on land.

(The Deputy Speaker in the Chair.)

But at the same time, land is the most valuable to society. Therefore if a Government want or are after a socialistic pattern or welfare State, it must be the primary aim of that Government to see how to utilize the land in the best interests of society and in the best manner possible. That can be done only by a comprehensive legislation. The main defect in this Bill is this, namely, the eviction clause is inserted in a legislation which is intended to give protection to the tenant, and that is the whole irony of it. This clause is sought to be justified on two grounds; one is the legal right of ownership and the other is that there is the other Bill pending before the Assembly—a Bill for the reduction of rent. I doubt whether ownership of a man is so absolute and contract is so sacred that the Government representing society cannot interfere with them. Moreover ownership has many aspects. It has been described by eminent jurists that it is a bundle of rights. One can call onself owner only if the whole bundle rests with one. Now with respect to land, what is the main item or the bundle of rights? While the tenants have been in actual physical possession of land and have been enjoying the absolute right to possess land—this is the fundamental right of ownership—eviction is now sought to be justified on the abstract legal right of ownership, which has considerably changed.

21st September 1956] [Sri M. Narayana Kurup]

In this connexion, I wish to quote a passage from the Congress Agrarian Committee Report in which Jaimini is said to have observed :

"The King cannot take away the earth, because it is not his exclusive property. It is common to all beings enjoying the fruits of their own labour. It belongs to all alike." 12-50 p.m.

Therefore, even in ancient days, this absolute right of ownership had little value as against society's interests. If that were so then, much less it is to-day. No tangible claim can be allowed to the right of ownership where the owner himself has sought to divest himself of the land by giving it away to his tenant.

Now, the other argument seems surprising. It has been sincerely argued that inasmuch as there is a reduction in the rent received by the landlord, he may not find it easy to maintain himself and that, therefore, he must be allowed to resume land. The very argument makes us suspect the *bona fides* of the Government in bringing forward the Fair Rent Bill. If it was really the intention of the Government to put an end to rack-renting, one should be surprised now, when the Government say that in view of fair rent being fixed, small land-owners should be allowed to resume land. Sir, we are fond of foreign experts and even in the matter of agrarian reform, we have consulted them. The Government sought the advice of a great American land tenure expert, Mr. Ledensky, who even visited the South. After his visit, he observed thus :

"Tenants both in Malabar and Tanjore had to pay to their landlords 70 to 75 per cent of their gross produce in the lands. Such things are hardly conducive to make them energetic about their work or to offer them the much needed incentive to produce more."

Therefore, it is a notorious fact that there is rack-renting.

THE HON. SRI M. A. MANICKAVELU : It is ancient history.

SRI M. NARAYANA KURUP : It was published only two or three years ago. The expert gave his report after studying the problem and I believe he was invited to advise the present Planning Commission on land tenures. Therefore, when the Government want to set right matters and right the wrong done to the cultivator —due to various circumstances, he has been giving 70 to 75 per cent of the gross produce to the landlord by way of rent—they should take away this provision regarding resumption. They should not try to reward the wrong-doer.

Sir, the working of the various provisions of the Bill would be very much complicated. I do not mean to say that the Government are not interested in the welfare of the tenants but this provision regarding resumption for personal cultivation is a price that they want to pay in order to appease a certain class of people.

[Sri M. Narayana Kurup] [21st September 1956

A landlord may have two or three tenants and one of them may be abyssmally poor. Still nothing can prevent the landlord from resuming the land from that poor tenant. That is the right of ownership. It is for us to consider whether such extreme rights of ownership should be vested in an individual in a Welfare State working on a socialistic pattern. This Bill cannot do justice to the tiller of the soil and it must be rejected by this House. It should form part of a comprehensive agrarian reform, as has been pointed out by various hon. Members, dealing with cellings for ownership and possession.

12-55 p.m. SRI S. CHELLAPANDIAN : கனம் [உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவை விவசாயிகளுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்பதற்காக ஒரு வருஷத்திற்கு முன்னதாகவே கொண்டு வந்தார்கள். விவசாயிகளை பாதுகாக்க வேண்டும் என்றால்—சர்க்காராக இருந்தாலும் சரி அல்லது சர்க்காருடைய அதிகாரியாக இருந்தாலும் சரி அல்லது அரசியல் வாதியாக இருந்தாலும் சரி பொது மக்களாக இருந்தாலும் சரி, விவசாயிகளுக்கு எவ்வளவு சௌகர்யம் செய்ய வேண்டும் என்று இந்தச் சட்டத்தைக் கொண்டு வருகிறார்களோ அந்த அளவுக்கு இந்த சட்டத்தின் மூலமாக விவசாயிகளுக்கு நன்மை கிடைக்காது, தீமைதான் விளைவிக்கும் என்பது என்னுடைய கருத்து. விவசாயிகளை நிலத்தை விட்டு வெளியேற்றக் கூடாது என்று எந்த விதமான சட்டத்தைக் கொண்டு வந்தாலும் அது சர்க்காருக்கும் சரி அல்லது மற்றவர்களுக்கும் சரி அது ஒரு பெருமையைக் கொடுக்கக் கூடியதாகத்தான் இருக்கும். ஆனால் இன்றைக்குக் கொண்டு வரப்பட்டிருக்கக் கூடிய திருத்தச் சட்டம் சர்க்காரிலிருந்து கொண்டு வந்தாலும் கூட அது மிகவும் அனாவசியமாகத்தான் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பது என்னுடைய கருத்து. இந்தத் திருத்தச் சட்டத்தைக் கொண்டு வரும்போது பல நண்பர்கள் பல விதமாகச் சொன்னார்கள். அதற்கு பல காரணங்களையும் எடுத்துச் சொன்னார்கள். அதாவது நூறுக்கு எழுபது விவசாயிகள் இப்பொழுது நிலத்தை விட்டு வெளியேற்றி இருக்கிறார்கள், அதைத் தடை செய்ய வேண்டும் என்றும் சொன்னார்கள். அதிலிருந்து குறைந்த நிலங்களை உடையவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டுமா அல்லது வேண்டாமா என்ற கேள்வி எழுகிறது. அவர்களுக்கும் பாதுகாப்பு அளிக்க வேண்டியதுதான். இவ்வளவு வருஷங்களாக அவர்கள் தங்களுடைய நிலங்களை குத்தகைக்கு விட்டு விவசாயம் செய்து வந்தார்கள். அதிலிருந்து வாக்கூடிய வரும்படியை வைத்துக் கொண்டு அவர்கள் தங்களுடைய வாழ்க்கையை நடத்திக் கொண்டு வந்தார்கள். ஒரு வருஷ காலம் கழித்து இந்தச் சட்டம் வந்தால் அவர்களுடைய குடி முழுகிப் போய்விடப்போகிறதா ? அதனால் இப்பொழுது இருக்கக்கூடிய சட்டத்தையே இன்னும் ஒரு வருஷ காலத்திற்கு நீடித்துக் கொள்ளலாம், இந்த புதிய சட்டம் தேவையே இல்லை. நிலச் சீர்திருத்தச் சட்டம் வரப் போகிறது என்ற நிலையிலும், நிலத்தை பகிர்ந்து கொடுக்கப் போகிறோம், அதற்கு வேண்டிய சட்டம் வரப்போகிறது என்ற நிலையிலும் இந்த திருத்தச் சட்டம் அவசியம் இல்லை என்றுதான் தோன்றுகிறது. இன்னும் மகசூலில் அறுபது, நாற்பது என்று பகிர்ந்து கொடுக்க வேண்டும் என்ற சட்டமும் வரப்போகிறது. அதனால் விவசாயிகளுக்கு நன்மைகள் ஏற்படலாம். அதனால் சர்க்காரிலிருந்து எந்த விதமான சட்டம் வந்தாலும் அதற்குப் முன்னதாக இந்தச் சட்டத்தைக் கொண்டு வரவேண்டிய் அவசியமே இல்லை. ஒரு அளவுக்கு நிலத்தை விவசாயிகள் எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற சட்டமும் வரப்போவதாகவும் அதன்படி எடுத்துக் கொள்ள அவர்களுக்கு ஒரு உரிமை அளிக்கப் போவதாகவும் சொல்லப்படுகிறது. மற்றும் மகசூலில் அறுபது, நாற்பது என்று கொடுக்க வேண்டும் என்ற சட்டமும் வரப்போவதாகச் சொல்லப்படுகிறது.

21st September 1956] [Sri S. Chellapandian]

அவைகளின் மூலம் விவசாயிகளுக்கு நன்மைகள் அளிக்க வேண்டும் என்று சொல்லும்போது இப்படிப்பட்ட திருத்தச் சட்டத்தின் அவசியமே இல்லை. இதன் மூலம் எவ்வளவு நன்மையை சர்க்கார் எதிர் பார்க்கிறார்களோ அதை விட விவசாயிகளுக்கு அதிகப்படியான தீமையே விளையும் என்றுதான் நான் கருதுகிறேன். அறுபது, நாற்பது என்று ஒத்துக் கொண்டாலும் சரி இன்றைக்கு சம்சாரிகளுக்கு நன்மைகளைக் கொடுக்க கூடியதாக இல்லை. இப்பொழுது அவர்களுடைய மனுக்கள் ஆயிரக் கணக்கில் பைசல் ஆகாமல் இருக்கின்றன. இப்பொழுது இருக்கும் சட்டங்களாலேயே அவர்களுக்கு அதிகப்படியான கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கும்போது இன்னும் சட்டங்களைக் கொண்டு வருவதன் மூலம் அவர்களுக்கு அதிகப்படியான கஷ்டங்களை விளைவிக்கக் கூடாது. அவர்களுக்கு மனக் கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. மக்கள்டத்தில் ஏற்கனவே மனக் குழப்பம் ஏற்பட்டிருக்கிறது. மக்கள் தலைவர்களாக இருந்தாலும் சரி, அரசியல் வாதிகளாக இருந்தாலும் சரி சர்க்காரிடத்தில் ஒரு பரிவிகி இருப்பதாக அவர்கள் நினைக்கவில்லை. அதனால் அவர்கள் குழப்பமடைந்து வருத்தப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே இப்படிப்பட்ட திருத்த சட்டத்திற்கு அவசியமே இல்லை. இப்பொழுது இருக்கும் சட்டத்தையே இன்னும் ஒரு வருஷத்திற்கோ அல்லது ஆறு மாதத்திற்கோ ஒத்தி வைக்கும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன். ஏற்கனவே உள்ள கலெக்டிவேடிங் டெனன்ட்ஸ் ப்ரொடெக்ஷன் ஆக்ட் இப்படியே இருக்கட்டும். ஆறு மாத காலம் கழித்து இதைப்பற்றி யோசித்துக் கொள்ளலாம். அதற்குள் ஆலோசனை செய்து நல்ல முறையில் ஒரு சட்டத்தைக் கொண்டு வரலாம். அப்படியே கொண்டு வரவேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இப்பொழுது சிறு நிலச்சுவாந்தார்களிடம் ஒரு வேகம் ஏற்பட்டிருக்கிறது. நிலத்திலிருந்து வெளியேற்றக் கூடாது என்று சொல்லும்போது எப்படியாவது அவர்களை வெளியேற்ற வேண்டும் என்று சொல்லுகிறார்கள். அப்படிச் செய்யும்போது பல நன்மைகளும் ஏற்படுகின்றன, தீமைகளும் ஏற்படுகின்றன. நாம் எதிர் பார்க்கும் நன்மையை விட அதிகப்படியாக தீமைதான் விளைகிறது. அதனால் அவர்களுக்குத் தகுந்த நடவடிக்கையும் எடுத்துக்கொள்ள வேண்டியதவசியமாக இருக்கிறது. சம்சாரிகளுடைய நிலைமையையும் கவனிக்க வேண்டியதாக இருக்கிறது. இப்பொழுது ஒரு ஏக்கரைக் கூட தனித் தனியாக பிரிக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். அப்படிப் பார்த்தால் ஒரு ஏக்கர் வைத்திருக்கிறவர்களுக்கு அரை ஏக்கரும் அரை ஏக்கர் நிலம் வைத்துக் கொண்டிருக்கிறவர்களுக்கு கால் ஏக்கரும் என்று போய் விடும். ஆகவே இதையும் கவனித்து இந்த திருத்தச் சட்டத்தை சர்க்காரே வாபஸ் பெற்றுக்கொண்டு வேறு சட்டத்தைக் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். ஒரு வருஷத்திற்குள்ளாகவோ அல்லது இன்னும் ஆறு மாதத்திற்குள்ளாகவோ வேறு ஒரு நல்லதோர் சட்டத்தைக் கொண்டு வரலாம் என்று சொல்லுகிறேன். இன்னும் ஆறு மாதத்தில் நன்றாக யோசனை செய்து வேறு ஒரு நல்ல சட்டத்தைக் கொண்டு வரவேண்டும் என்று தெரியப் படுத்திக் கொண்டு இந்த திருத்தச் சட்டத்தை வாபஸ் பெற வேண்டும் என்று கேட்டுக் கொண்டு இத்துடன் முடித்துக் கொள்ளுகிறேன்.

DEPUTY SPEAKER : The House will now rise and meet again at 3 p.m.

The House then rose for lunch.

(After lunch—3 p.m).

(Mr. Speaker in the Chair.)

SRI P. RAMAMURTHI : Mr. Speaker, Sir, this amendment is a very important amendment. The purpose of this amending Bill is a very limited one. You will remember, Sir, that when the Bill was moved last year, the Government themselves gave an

assurance on the floor of the House that this was a purely temporary measure and was intended to give a certain measure of protection to the tenants in our State who were facing large-scale evictions at the hands of landlords who obviously were resorting to such measures with the intention of circumventing any legislation embodying a certain measure of land reforms that might be passed later on. In view of that particular situation that was prevalent in the State at that time, this measure was brought in to give temporary protection to the tenants and to prevent them for a period of one year from being evicted by the landlords. At that time Government stated that they were thinking of comprehensive land reforms of which I believe ceiling on land was an important part. At any rate for the last five years or so Government have been tom-toming—the Planning Commission was saying again and again—from house-tops that they were going to impose a ceiling on land holding.

THE HON. SRI C. SUBRAMANIAM : Is it from house-tops or on the floor of the House?

SRI P. RAMAMURTHI : The Ministers wherever they went have been tom-toming from house-tops and if not from house-tops from the biggest platforms they could get hold of that they were bringing in land reforms. Anyway I can assure you, Sir, that our Hon. Ministers cannot be beaten in demagogy. Let them be assured that I will not be able to beat them in demagogy.

THE HON. SRI C. SUBRAMANIAM : To reach the house-top, I thought the hon. the Leader of the Opposition was better suited.

SRI P. RAMAMURTHI : Even physically it is not possible for me.

3-10 p.m. Anyway, Sir, at that time specific assurances were given on the floor of the House that that Bill was purely a temporary measure. But then, for reasons best known to themselves, Government have been postponing what they called their comprehensive land reforms. Now we are told that they are thinking of introducing these land reforms by stages. For the simple reason that they had not brought in the comprehensive land legislation that they were talking of, it became absolutely essential that this measure of protection had to be extended by at least a year or so. But at the last moment, the Hon. Minister brought in an amendment which provided for the right of resumption. Unfortunately, this is the real trouble of the whole measure.

At one time, the Government stated that they did not want to go into the fundamentals of land reform. Then they stated that they were examining the whole question of land reforms. Although it had been definitely stated that the Planning Commission had formulated certain fundamental principles of land reform, the Madras Government had stated that they had got to see whether they would be applicable to our State. Then the Planning

21st September 1956] [Sri P. Ramamurthi]

Commission had made a declaration that so far as fundamental principles like ceiling of land holdings, reduction of rent and permanency of tenure are concerned, they were all-India questions. We do not know how long the Madras Government will take to examine the fundamentals of land reforms and come to a decision. After all, what are the fundamental principles of land reform? Obviously, we are interested in the question of land reform from two angles. One is from the point of view of reducing the inequality in wealth and income of our country and the other is from the point of view of the economic development of our country and the increase in the total wealth of the country. As a matter of fact, the Planning Commission itself point out :

"The objectives of land reform are twofold; firstly, to remove such impediments upon agricultural production as arise from the character of the agrarian structure and secondly, to create an agrarian economy with high levels of efficiency and productivity."

We certainly welcome this outlook that the whole problem of land reforms has got to be looked at not only from the point of view of reducing the inequality in wealth and income but also from the point of view of removing all impediments and shutters which are to-day fettering the agricultural production in this country. Judging from that standpoint, where do we stand with regard to the amendments that have been proposed? By these amendments, the small owner will be pitted against the tenant. Far from creating any improvement in agriculture, they are going to create tension in the countryside. Tension will be engendered not between the big landlord and the ordinary people but between the poor peasant or small landowner and the tenant. That is going to be the direct result of this Bill. What do the amendments propose? Regarding the right of resumption of land by the small owner, we certainly agree with it. As far as the Party to which I have the honour to belong is concerned, even in 1953 they made it clear that the question of the right of resumption by the small landlord had got to be tackled with sympathy in deserving cases where they had no other avocation of livelihood. In all those cases, this right has got to be given with certain safeguards for the tenants. But the amendment proposed, instead of solving one problem, is going to create more problems. That is my complaint against the Government. According to the amendment, the landlord can resume personal cultivation of 50 per cent of the lands from the tenant. Of course, there is a safeguard that the total extent of land should not exceed 5 acres. Certainly he is entitled to resume the land for personal cultivation. In our country, the extent of land tilled by a tenant varies from one acre to five acres. For instance, in the Tirunelveli district, a peasant tills about one acre of land. According to the Bill, if half acre is taken away from him, would it be possible for him to till the other half acre of land economically? Would it be possible for him to maintain a pair of bullocks for half

an acre of land? No. What is going to happen? The actual result of it would be that the landlord on the basis of his ownership of land will be able to raise some loan and cultivate his land. It may be in the first year he may not properly cultivate it and may even undergo a loss but he will certainly be able to withstand it. But what about the tenant? He will not be in a position to raise loans, with the result that he will have no alternative but to surrender his land to the landholder. So, the provision regarding 50 per cent of the land for the tenant, does not help him. It is a fictitious protection. It is not a real protection. Actually the tenants who cultivate more than three acres of land are few in number. So, if 50 per cent of the lands are taken away from them, it will only lead to large-scale evictions.

THE HON. SRI C. SUBRAMANIAM : I would like to inform the hon. Leader of the Opposition that we are bringing forward another formula so that we may avoid these difficulties. Then, I am sure, he would not be so eloquent in the criticism of this amendment.

SRI P. RAMAMURTHI : I would certainly be glad if the Hon. Minister has become wiser after the meeting of the Select Committee.

THE HON. SRI C. SUBRAMANIAM : I will always like to become wiser and I do not refuse to learn just like the hon. Leader of the Opposition.

SRI P. RAMAMURTHI : I wish that the statement had been proved. But anyway for the present moment I would be glad if the Government have become wiser now. In the Select Committee an amendment was proposed to give at least a minimum acreage of land to the tenants. But it was opposed there. If they have now changed their policy, I would be very glad about it. I would like to see what exactly that formula is. Unless I see it, I will not be satisfied.

Therefore, the real problem is that of large-scale eviction. Even one Member of the Congress has criticised the Bill on the ground that it is going to result in the eviction of a large number of tenants. Whether the Government like it or not or whether it is their intention or not, either eviction is going to take place or whatever lands which remain in the hands of the tenants are giving to be surrendered. Therefore, it is going to create large scale unemployment in our country. It is going to add to the number of landless people and consequently increase the number of unemployed people tremendously.

3-20 p.m. Is there no solution to this problem? Yes, there is a solution to this problem and we stand by that. After all, these pieces of legislation are going to create more complication. If the Government are not prepared to immediately impose a ceiling on the extent

21st September 1956] [Sri P. Ramamurthi]

of land a man can own, why not they impose a ceiling on the extent of land that a man can personally cultivate? That is a very simple proposition. In our own State, after all we know that during the last five or six years the biggest landlords have taken more and more of their lands under what is called 'personal cultivation'. They are employing a large number of labourers—hundreds and thousands of labourers, for bringing their lands under personal cultivation. In Tanjore district the biggest landlords have already got all their lands under personal cultivation. Two thousand acres have been brought under personal cultivation and in some cases four thousand acres by single landowners, in that district. That is the position obtaining not only in Tanjore district but in district after district in the State. The biggest landlords, with a view to see that they do not come under the purview of any tenancy legislation, have taken to personal cultivation of all their lands, and they have taken from tenants thousands of acres of lands for purposes of personal cultivation by employing labourers. I ask, why not the Government think immediately of imposing a ceiling on the extent of land that can be held by an individual for the so-called personal cultivation, whether it is the pannai type that is prevalent in Tanjore or any other type of cultivation that is prevalent in other districts? If we are able to impose a ceiling on the extent of land that a man can have for personal cultivation, then the whole problem of helping small landowners to resume lands for personal cultivation can be solved. As a result of introducing a ceiling on the extent of land that a person can have for personal cultivation, the Government will have a surplus amount of land which can be taken in a pool and once that is done, the right of resumption can be granted—not in a haphazard manner as is now being done but in a more scientific way. Do not create quarrels between small landholders and tenants. I have no objection to a person owning five or six acres of land resuming his land for personal cultivation. If, as I said a ceiling is fixed on the extent of land that a person can possess for personal cultivation, then the tenant who is affected can be compensated out of the pool of lands that the Government are able to obtain by imposing a ceiling on the land which a landlord can have for personal cultivation. This is a simple way of solving the proposition. But our Government are not prepared to adopt that way. Why? I openly say that the Government are not prepared to adopt it because it will affect the big landlords. This legislation and even the Cultivating Tenants (Payment of Fair Rent) Bill are not going to affect the big landlords because most of them have already brought all their lands under personal cultivation. The Government knew that these big landlords have been bringing their lands under personal cultivation. I charge the Government with having deliberately allowed the big landlords to resume all their lands under personal cultivation pending the introduction of land reforms. The Government gave the landlords three or four years' notice that land reforms would be introduced. Having given that and having allowed the big landlords to resume their lands for personal cultivation, even

[Sri P. Ramamurthi] [21st September 1956

to-day the Government have not taken up the question of effecting land reforms seriously with a view to see that justice is meted out to both small landholders and tenants. To-day as a result of the system of land tenure which has been created by the British and to which the landlords are wedded justice is denied to all the small peasants as well as the small landholders. The Government are not now trying to do justice to these sets of people both of whom are suffering from a denial of justice. If the Government have really got the intention of doing justice both to the small landholders and to the tenants, certainly they can make an open declaration on the floor of the House that the question of their resumption of lands will be sympathetically considered. After all it is the small tenant and the small peasant who have got to live together in the village. The big landlords do not live in the villages at all. So long, kisans' struggles—peasants' struggles—have been directed against the big landlords. Even in Tanjore district wherever troubles had arisen as between small landholders and agricultural labourers, it has been possible to arrive at immediate settlements because agricultural labourers are willing to show more concessions to small landholders as against big landlords. All the movements started by peasants have been directed against big landlords. If this legislation is passed, the relationship between small landholders and tenants would be affected and this would disturb or complicate the social and economic lives of the people in the countryside. Therefore, instead of creating such a situation, our Government can certainly promise the small landholders that they would be enabled to resume their lands within a period of one or two years so that the social life in the villages is not disturbed and complicated and in the meanwhile they may bring forward some piece of legislation which will ensure a certain amount of surplus land in the hands of the State from out of which small landholders and tenants can be compensated. In this manner the problem can be solved in a smooth and simple way. Instead of doing that, the Government are coming forward with this piece of legislation which will only make the small landholders fight with the kisans. The real idea of the Government is that small landholders, as a result of introduction of this legislation, will fight the movements started by kisans, because the latter are opposing the resumption of lands by the former. But I have faith in our small mirasdars. If the relationship between them and the small peasants is strained, their lives in the villages will become exceedingly difficult. I would appeal to the Government not to press this legislation. Even at this late stage I would tell the Government to give up their idea of passing the Bill as it stands. The implications of the provisions of the Bill have not been properly looked into. People who know the nature of the problem will not accept such ill-thought-out amendments proposed by the Government. Sitting for one-day in a Select Committee is not enough to come to a right decision. I told the Hon. Minister at the Select Committee that he was looking at the problem with a closed mind. The Minister at that time only said,

21st September 1956] [Sri P. Ramamurthi]

"Our party has decided upon a certain course and if your Party is against it, you may do as you desire when your party comes to power." Here, Sir, we are discussing problems of the people with a view to understand their difficulties and remove them. It is with this understanding we have to look at every problem. The Government must not be thinking of the difficulties which would be caused to them if the problem were to be solved in a just manner. After all the Government exist for the people and it is not that the people exist for the Government. If the Government exist for the people, then the difficulties of the people have to be overcome. The problem has to be looked from the point of view of the difficulties that are created for the people. After all the purpose of Government is to see to the well being of the people. Even the Hon. Finance Minister had told that this amendment would lead to a lot of practical difficulties in the countryside. I am also sure that this amendment would positively affect many people. When such is the case, I do not know why the Government are going on pressing this amendment. Therefore, I would ask the Government once more not to bring in the latter part of the measure. Let them not bring forward this amendment now. Let us have after all a simple legislation extending the life of this measure for even one year. Within that one year we shall try to solve the question of allowing small landlords to resume their lands for personal cultivation, in such a way so that no tenants are evicted. But if the present amendment is still persisted in, we would have no option left except to oppose it. I would once again appeal to the Hon. Minister not to press this amendment. 3.30 p.m.

* SRI P. G. KARUTHIRUMAN : Mr. Speaker, Sir, I do welcome this Cultivating Tenants Protection (Amendment) Bill, 1956. The Hon. the Leader of the Opposition had cited the Planning Commission's Report in support of his stand. I wonder whether he supports the Planning Commission's Report only in this connection or whether he is in agreement with all that is contained in that report. Previously they had said that they did not believe in the Second Five-Year Plan. They did not then believe in the Planning Commission. But now, the Opposition Leader quotes something in support of his stand from the report of the Planning Commission. It is just like the devil quoting scripture.

SRI P. RAMAMURTHI : Do you object to its being called a scripture?

THE HON. SRI C. SUBRAMANIAM : He objects to the devil quoting scripture. (Laughter.)

SRI P. G. KARUTHIRUMAN : One thing that should be kept in mind while passing any Bill is to see whether it affects production, and if it does, we should not pass that measure. Let us see what the Planning Commission's Report says. The idea of Planning Commission is to increase production. In any scheme

